

# தென்மொழி

## குதிரைக் கொம்பே!

நாட்டினிலே ஊரகத்தே தெருவில் இன்றும்
நடைமுறையில் கனல்கக்கும் சாதித்தீயை
ஏட்டினிலே பாட்டினிலே மேடைப் பேச்சில்
இல்லையென்று மறுத்துவிட்டால் இல்லையாமோ?
மூட்டுகின்ற கலவரத்தில் முனைந்துநிற்கும்
முழுமக்கள் எக்குலத்தார் என்றறிந்து
மாட்டுகின்ற காரணத்தின் ஆணிவேரை
மாய்ப்பதற்குத் தயங்குவதேன் ஆட்சியாளர்?

சிலைவைத்துப் பெயர்சூட்டு விழாநடத்திச்
சிதைவுற்ற சாதிகளை வளர்த்தெடுக்கும்
கலைகற்ற கயவர்களா இந்த நாட்டைக்
கடைத்தேற்ற வந்தவர்கள்? வாய்ப்புநாடி
அலைகின்ற அறக்கொடிய நெஞ்சினாரை
அடியோடு வீழ்த்தினா லன்றியிங்கே
நிலைகொண்ட சாதிகளை வீழ்த்துகின்ற
நினைவென்றும் நிகழ்வாதல் குதிரைக்கொம்பே!

— இறை

சுவடி 28
ஓலை 3

விலை
உருபா : 4.00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. உ0உஎ ; மீனம்

1996 மார்ச்சு



# அதுதான் என் ஆசை!

முன்னைப் போலத் தமிழ இனம்
இன்னல் துயரம் யாவும் நீங்கித்
தன்னைத் தானே ஆள வேண்டும்
அதுதான் என் ஆசை!

மின்னைப் போலக் கதிரைப் போல
அன்னைத் தமிழ்த் தாய்மொழி, இம்
மண்ணை ஆட்சி செய்ய வேண்டும்!
இதுதான் உள் ஓசை!

உலகம் முழுதும் அலைந்து சாகும்
இலக்கை இழந்த தமிழர், தமிழ்
நிலத்தில் வந்து வாழ வேண்டும்!
அதுதான் என் நோக்கம்!

புலத்தை மீட்டுப் புண்மை தவிர்த்துக்
குலத்தில் தமிழர் ஒன்றே என்னும்
இலக்கை மீண்டும் அடைய வேண்டும்!
இதுதான் என் ஆக்கம்!

ஊரும் பேரும் உலகம் போற்ற
தாரும் நிலமும் தமிழர் தாங்க
ஏரும் நீரும் செழிக்க வேண்டும்
அதுதான் என் வேண்டல்!

தூரும் தும்பும் கசடும் நீக்கி
வீறும் அன்பும் மனத்தில் ஊறக்
கூறும் நலன்கள் குவித்தல் வேண்டும்
இதுதான் என் தூண்டல்!

– பாவலரேறு பெருஞ்சித்திரனார் – (தென்மொழி சுவடி 21 ஓலை 9)

---


## தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

| | |
|---|---|
| ஆண்டுக்கட்டணம் | உருபா. 48.00 |
| அரையாண்டுக்கட்டணம் | உருபா. 24.00 |
| தனியிதழ் | உருபா. 4.00 |

**வெளிநாட்டுக் கட்டணம்**

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/–
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/–

" கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*(நிறுவனம் தி.பி.1990 (1959)*




தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்


**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.


சுவடி : 28) தி.பி.உ0உஎ – மீனம் (மார்ச்சு–'96) (ஓலை 3)


# மட்டைப்பந்து விளையாட்டால் திட்டமிட்ட சீரழிவுகள்

**ம**க்களின் இயல்பான எண்ணங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் இடனின்றிக் கடந்த பல நாட்களாக அலைக்கழித்துக் கொண்டிருந்த மட்டைப்பந்து விளையாட்டு ஒருவாறு ஓய்ந்தது. வீங்கிய தலையில் விழுந்த தோல்வியடியால் இந்திய விளையாட்டு அணியின் நாடி தளர்ந்தாலும் அதை ஒப்புக்கொள்ள மனமின்றி எகிறிக்குதித்த 'இந்தியர்கள்' அழிம்புகள் செய்து அடங்கினர்!

தனியார் குழுமம் பொறுப்பேற்று நடத்தும் இம் மட்டைப்பந்து விளையாட்டுக்கு இந்திய அரசின் சார்பில் செலவிடப்படும் தொகை, வழங்கப்படும் சலுகைகள் மற்றும் விளம்பரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஒரேயொரு எடுத்துக்காட்டு கூறவேண்டுமானால், சென்னையில் இவ்விளையாட்டுக்காகப் பொருத்தப்பெற்ற பேரொளி விளக்குகளுக் கான செலவு மட்டும் உருவா ஐந்து கோடி இந்தியாவில் இத்தகைய விளக்குள் ஆறு இடங்களில் அமைக்கப் பெற்றிருந்தன. வெப்பமற்ற ஒளியாக வெயிலெரிக்கும் இங்கிலாந்து நாட்டின் சூழலை இங்குள்ள மக்களின் - மட்டைப்பந்தாட்ட விரும்பிகளின் மனவுணர்வில் செயற்கை யாக எழுப்பும் முயற்சியே இவ்விளக்குகளின் அமைப்பு! இவ்விளக்கு களுக்காக மின்சாரம் மிகுந்த அளவில் இழுக்கப்பெற்றமையால் அவ்வப் பகுதிகளிலுள்ள தொழிலகங்கள் செயலிழந்தன. சென்னை திருவல்லிக் கேணியில் வணிகநிலையங்களும் குடியிருப்புகளுங்கூட மின்வெட்டுக்கு ஆளாயின.

இரவுபகல் எந்நேரமும் தொலைக்காட்சியில் ஒளி பரப்பு; வானொலியில் வண்ணனை; செய்தித்தாள்களில் பக்கம் பக்கமாகச் செய்திகள்; அரசு அலுவலகங்களுக்கும் கல்விக் கூடங்களுக்கும் விடுமுறை என இவ்விளையாட்டை யொட்டிய திருவிளையாடல்கள் ஏராளம்.

ஒரு காலத்தில் இங்கிலாந்து நாட்டின் பெருஞ்செல்வர்களான ஊதாரிகள் மகிழ்ந்து கைக்கொண்ட இவ்விளையாட்டு இன்றளவும் ஆங்கில அடிமைநாடுகளால் தொடரப்பட்டு வருகிறது. இங்கிலாந்தைத் தவிர ஐரோப்பிய நாடுகள் வேறெதிலும் இம்மட்டைப்பந்தாட்டம் சாய்கால் பெறவில்லை. அமெரிக்காவோ, உருசியா, சீனா போன்ற பிறநாடுகளோ இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதில்லை. இன்னுஞ் சொல்லப்புகுந்தால் ஒலிம்பிக்கின் பட்டியலில்கூட இடம்பெறாத விளையாட்டு இம் மட்டைப்பந்து.

இன்று இந்திய அரசு இவ்விளையாட்டில் முனைப்புக் கொள்வதற்கான காரணம் கலைவளர்ச்சி என்பதனால் காட்டும் அக்கறையா? உலகப்புகழ்பெற்ற சிவாசி கணேசனின் சிறப்புமிகு நடிப்பாற்றலையோ, இளையராசவின் இணையற்ற இசைத்திறத்தையோ பாரிய அளவில் பாராட்ட மனங்கொள்ளாத இந்திய அரசு - விளையாட்டுக் கலை யென்றே எடுத்துக்கொண்டாலும் பி.டி. உசாவின் வெற்றி ஓட்டத்தையோ, செல்வி அமுதா வெற்றிகொண்ட முக் களத்தையோ(டிரைத்லான்) அனைத்திந்திய அளவில் கொண்டாட விரும்பாமல் - கண்டுகொள்ளாமலே விடும் நடுவணரசு தேசிய இன வுணர்வுகளை மழுங்கடித்து இந்திய உணர்வை வளர்த்தெடுப் பதற்காகவே இம்மட்டைப்பந்து விளையாட்டை எட்டினமட்டும் உயர்த்திப்பிடிக்கிறது.

இலங்கையில் இனப்படுகொலைபுரியும் சிங்கள அரசேகூடத் திறமைசாலியான தமிழனைத் தன் விளையாட்டு அணியில் சேர்த்துக் கொள்கிறது, ஆனால் இந்திய மட்டைப்பந்து விளையாட்டு அணியில் தில்லி வட்டாரத்தவர்களை மட்டுமே இனங்கண்டு வளர்க்கிறது இந்திய அரசு. தமிழன் எத்துணைத் திறமைசாலியாயினும் தட்டிக் கழிக்கப் படுகிறான்.

தேசிய இனங்களை அடையாளங்காட்டும் கலைகள் இந்திய அரசால் புறக்கணிக்கப் படுகின்றன; அவற்றுக்கு மாறானவை யெல்லாம் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. நமது கிட்டிபுள் விளையாட்டாகவே இருந்திருந்தால் இம் மட்டைப் பந்து விளையாட்டும் கட்டாயம் அந்நிலையையே அடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அறிவாக்கங்களில் மனஞ்செலுத்தி நிறைந்த செயல்வெற்றிகளை நிகழ்த்தவல்ல நீண்ட எதிர்காலத்துக்குரிய இளைஞர்கள், போர்க்குண முனைப்பு திசை திருப்பப்பட்டு இத்தகைய காட்சிகளில் முடங்கிக் கிடப்பது வருந்தத் தக்கது!.

— *இறை*

# தமிழீழச்சிக்கலை எப்படித் தீர்க்கலாம்?

– த. அரிமா வளங்கோ, பிரான்சு.

இந்தியத் துணைக் கண்டத்தின் வலிமையான மேற்பார்வையில் தமிழீழச் சிக்கலைத் தீர்ப்பது என்பது குரங்கு அப்பத்தைப் பங்கிட்ட கதைபோலத்தான் என்பதைக் கடந்த காலவரலாறு காட்டிவிட்டது. உருசியா சோவியத்துக் கூட்டமைப்பி லிருந்து உடைந்த பின்பு வலுக்குறைந்து காணப்படும் இந் நேரத்தில் அமெரிக்கா மட்டுமே பெரும் வல்லரசாகக் காட்சி தருகின்றது.

ஊகோசுலாவியா பல துண்டுகளாகச் சிதறத் தொடங்கிய காலத்திலிருந்து அங்கே நடந்து வரும் பல்வகையான கொடுமைக் காட்சிகளை மூன்றரை ஆண்டுகளாகத் தொலைக் காட்சியிலும், செய்தித் தாள்களிலும் கண்டு அறிந்து கைகட்டி வாய்மூடிக் கிடந்த உலக நாடுகள் அமெரிக்கா இறங்கி தேயிதன் (DAYTON) என்னும் நகரத்தில் கூட்டிய வட்டமிசைக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளின் அடிப்படையில் போசுனியாவில் ஒரு தீர்வுக்கு அடிகோலப்பட்டு உள்ளது. அத்தீர்வே இறுதியான அமைதித் தீர்வா என்பதை இப்போதே நாம் கணித்திட முடியாவிட்டாலும், நடந்து வந்த பெருங் கொடுமைகளுக்கு ஏதுமறியாத பொது மக்கள் காவு கொடுக்கப்பட்ட நிலைமை தீர்ந்தது என்பதில் இப்போது மகிழ முடிகின்றது.

பிரத்தோன் (BRITTANIA) என்பது பிரான்சின் எல்லைக்குள் உள்ள மூன்று மாநிலங்களையும் தனிமொழியையும் கொண்ட பகுதி ஆகும். இரண்டாம் உலகப் போரின் போது ஆளுமைத் தேவைக்காக பிரான்சுடன் சட்டப்படி இணைக்கப்பட்ட பகுதி இது. இதேபோல் செருமானிய எல்லையில் உள்ள அல்சாசு - உலோரேன் (ALSACE & LORRAINE) ஆகியவையும், இத்தாலிய எல்லையில் உள்ள கோர்சு (CORSICA ISLAND) தீவும் தனிமொழி, தனி இனம் என்று தங்கள் விடுதலைக்காகப் போராடி வருகின்றன. பிரான்சின் இன்னொரு பகுதியில் இசுப்பாஞியம் (SPAIN) பாசுக்கு (BASQUE) மக்கள் வாழும் இரு மாநிலங்கள் உள்ளன. இப்படி நான்கு வகையான எல்லைப்புறங்களில் மொழிவாரித் தனி உரிமை கேட்கும் மக்களின் போராட்டங்கள் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வலுத்துவருகின்றன.

ஆங்கில நாட்டிலும் 24 இனங்களின் கூட்டாட்சியே உள்ளது. அங்கும் காத்துலாந்து (SCOTLAND) மக்கள் தனி உரிமைக்குப் போராடுகின்றனர். அயர்லாந்து தனிநாடாகப் பிரிந்தும் சமயப் போராட்டத்தைச் சாக்காகக் கொண்டு வட அயர்லாந்து-தென் அயர்லாந்து என்று இரண்டாகித் தென் அயர்லாந்து இங்கிலாந்தின்

ஆளுமைக்கு உட்பட்டு இருந்து வருகின்றது. இங்கும் ஐ.ஆர்.ஏ. என்னும் விடுதலை இயக்கம் விடுதலைக்காகப் போராடி வருகின்றது. இசுப்பாஞியாவில் பாசுக்கு மக்களின் போராட்டம் இ.ஆர்.ஏ. என்னும் விடுதலைப் புரட்சியாளர்களால் கொண்டு நடத்தப்படுகின்றது.

தமிழீழச் சிக்கல் வெடிப்பதற்கு முன் உலகறிந்த விடுதலைச் சிக்கல்களே இவை. ஆயினும், ஐரோப்பாவில் விடுதலை இயக்கங்களை எப்படி நடத்துகின்றனர் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.

பிரான்சில் பிரத்தோனிய இனத்தார்க்குத் தங்கள் மொழியைக் கல்விக் கூடங்களில் கற்கத் தடையை நீக்கி விட்டனர். மற்ற பிரஞ்சுப் பகுதிகளைப் போலவே அரசு அலுவலகங்களில் சம உரிமையைப் பிரத்தோனியர் பெற்று விட்டனர். பொருளியல் திட்டங்களைத் தீட்டுவதிலும் பேராலைகளை நிறுவுவதிலும் மட்டும் இன்னும் பிரத்தோனியப் பகுதிகள் புறக்கணிக்கப்படுவதாகக் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. மற்றபடி பிரத்தோனிய மக்களின் போராட்டம் மிகக் குறைந்து விட்டது. பிரத்தோனியாவின் மற்ற பெரும் பகுதியே மா பிரத்தோன் (Great Britain) என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது என்பதை நாம் உணர வேண்டும். இன்னும் சொன்னால் அயர்லாந்து நாட்டின் ‘கெயிலிக்’ மொழி என்பது பிரத்தோனிய மொழியின் திரிபே. இரண்டும் கடல் மீனவர்தம் மொழியே!

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அல்சாசும் - உலோரேனும் செருமனியுடன் இணைந்துவிட முயற்சி செய்தன. பொருளியல் சிறப்பாண்மை காரணத்தால், பிரான்சு அப்பகுதிகளுக்குத் தனி உரிமை (இந்தியத் துணைக் கண்டத்தில் காசுமீருக்குத் தனி உரிமை தந்திருப்பது போல்) தந்துள்ளது. அங்கே வாழ்கின்ற மக்களுள் பலர் எல்லை தாண்டிச் செருமனியில் அலுவல் பார்த்துப் பிரான்சுக்கு வீடு திரும்புகின்றனர்! பேச்சு மொழி செருமனியே! நகர மன்றங்களில் இருமொழித் திட்டம்! எனவே அங்குள்ள மக்களின் போராட்டம் அடங்கி விட்டது.

இசுப்பாஞியாவில் ஒவ்வொருமுறையும் வெடிகுண்டுத் தாக்குதல் போராட்டத்தைத் தனிநாடு கோரும் பாசுக்கு மக்கள் நடத்தும் போதெல்லாம் பிரான்சிலுள்ள பாசுக்கு மாநில மக்களே பேரளவில் கருவி திரட்டுதல், பொருள்- ஆள் வலிவு கூட்டுதல் முதலானவற்றில் ஈடுபட்டு உதவுகின்றனர் என்பதைச் செய்தித்தாள் வழி அறிகிறோம். அவ்வப்போது பிரான்சு அரசு தம் பகுதியில் உள்ள பாசுக்குப் போராட்டத் தொடர்பாளர்களை இசுப்பாஞிய நாட்டிற்குச் சிறைப் பிடித்து அனுப்புவதும், இருநாடுகளும் போராட்டத்தைப் பற்றிய செய்திப் பரிமாற்றங்களை நேரடியாக நடத்தி உதவுவதும் கண்கூடு. இதனால் பாசுக்கு மக்கள் இசுப்பாஞியாவிலும் பிரான்சிலும் பரந்து

கிடக்கும் தங்கள் தாயக மண்ணை மீட்பதற்கு இருபேரரசுகளும் (இசு.பாஞியா - பிரான்சு அரசுகள்) தடையாக இருந்து வருகின்றன. என்றாலும், பாசுக்கு ஐரோப்பியாவிற்குள் இருப்பதால், போராளிகள் ஒரு சிலரைத்தவிரப் பாசுக்கு மக்களுக்கு இருபேரரசுகளாலும் எத்தகைய கெடுபிடி அச்சுறுத்தல்களோ, வாழ்வியல் நேரடித் தடைகளோ, கல்வி, பொருளியல் மற்றும் அலுவல் முறைகளில் ஏற்றத் தாழ்வுகளோ முற்றிலும் கிடையாது; காவல்துறை, படை இவற்றில் பாசுக்குகள் வடிகட்டுதல் முறையில் சிறிய அளவில் சேர்க்கப்படுகின்றனர். இதில் இரு பேரரசுகளும் மிகவும் கவனமாக இருப்பதைக் குறிப்பிட வேண்டும்.

இதே போல் கோர்சு மக்களும் பொருளியல் வளர்ச்சியில் பிரான்சின் தலைநகரத்திலும் மற்ற பெருநகரங்களிலும் கையோங்கி யுள்ளனர். சூதாட்டக் களரிகளும், ஏற்றுமதி வணிகங்களும், இன்னும் சொன்னால் அமைச்சகத்திலேயே சிறப்பிடமும் கோர்சு இனத்தவருக்குத் தரப்படுகின்றது. இருந்தாலும் பிரான்சை ஒட்டி, இலங்கையைப் போல, கோர்சுத் தீவு இருப்பதால், அதன் தனித்தன்மை, இயற்கை அழகு, கடல் வளம், கடல் பாதையின் முகாமை போன்ற பல காரணங்களால் ஏராளமான பொருள் இழப்பில் பிரான்சு கோர்சைத் தன்னுடன் வைத்திருக்கின்றது எனலாம். கோர்சு நாட்டில் கோர்சு மொழியே எங்கணும் பேசப்படுகின்றது; கல்வியும் இருமொழித் திட்டமாக உள்ளது. அங்குள்ள சட்டமன்றம் தனி நாடாளுமன்றம் போலவே இயங்குகின்றது.

நாடுகாணவரும் பல நாட்டு சுற்றுலாக் காரர்களால் பெரும் வருவாய் கோர்சு நாட்டிற்குக் கிடைக்கின்றது. இருந்தும் உணவு முதல் கருவிகள் வரை எல்லாம் பிரான்சிலிருந்தே இறக்குமதி செய்யப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது.

இந்த நிலைமையிலும் கோர்சில் நாள் தவறாமல் வன்முறைகளும், வெடி வைப்புகளும், ஆள்கடத்தல்களும், பிரஞ்சு அரசு அலுவலகத் தகர்ப்புகளும் நடந்த வண்ணம் உள்ளன. கடந்த 45 ஆண்டுகளில் 35,000 பேர் இறந்துள்ளனர். (கொல்லப்பட்டுள்ளனர்); நூற்றுக்கணக்கான கோடி பிரஞ்சு பிராங்குகள் (French Francs) அளவு இழப்புகள் ஆண்டுதோறும் நடந்து வருகின்றன. தேவைப்படும்போது போராளி களுடன் அமைதிப் பேச்சுக்குப் பிரஞ்சு அமைச்சர்களே நேரில் சென்று ஈடுபடுவதுடன், போராளிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்பச் சிறையாளி களை விடுவித்தும், மறைமுகமான பிறஉதவி-சலுகைகளுக்கு இசைந்தும், அமைதியை நீட்டித்து வருகின்றது பிரஞ்சு அரசு.

பிரஞ்சு நாடாளுமன்றத்தில் கோர்சு மக்கள் தனி இனத்தவர் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுச் சட்டவரைவு செய்யப்பட்டுள்ளது. அன்றாடம் நடைபெறும் கோர்சு இனத்தவரின் வெடி, தகர்ப்பு

களைப்பற்றிய காவல்துறை ஆராய்ச்சி, பொதுவான குற்றங்களை ஆராய்வதைப் போன்று அமைவதில்லை. விடுதலைப் போராட்டக் காரர்களின் நடவடிக்கைகளை மிகுந்த கவனமாகவும் செய்தி முகாமைக்கு இடம் தராமலும் கையாளுகின்றனர் காவல்துறையினர்! அஃதாவது, பொது மக்களுக்கு (கோர்சு தீவு) யாதும் இடைஞ்சலும் மனத்தாங்கலும் வராத அளவுக்கு மிகுந்த விட்டுக் கொடுப்பு உணர்ச்சியுடனும் போராளிகளுக்கு ஊறு நேராவண்ணமும் பிரஞ்சு அரசே விழிப்புடன் பார்த்துக் கொள்கின்றது. இதனால், அங்கே வாழும் மக்கள் போராட்டக்காரர்களுடன் இணைந்து இருந்தாலும், மற்ற பிரஞ்சுக்காரர்களைப் போலவே நடத்தப்படுவதால், மக்களிடையே (பிரெஞ்சு மற்றும் கோர்சு மக்களிடையே) காழ்ப் புணர்ச்சி வராமல் தற்காக்கப்படுகின்றது.

போராளிகள் சிறைப்படுத்தப்பட்டாலும் துன்புறுத்தப்படுவ தில்லை. கூடியவரை தீர்ப்பும் விரைவாக வழங்கப்பட்டு தண்டனைக் காலமும் பல்வகைச் சலுகைகளுடன் குறைவாகவே தரப்படுவதையும் குறிப்பிடவேண்டும். இன்னும் சரியாகச் சொல்வதானால், அரசியல்-இன உணர்ச்சிகளுக்குப் போராடும் போராளிகளை மிகுந்த மதிப்பு-மானவுணர்வுடன் அரசு நடத்துவதால். அப்போராளிகளின் கொள்கைக்குப் பாதுகாப்பும் அரசமதிப்பும் கிடைக்கின்றன.

விடுதலைக் கொள்கையை ஐரோப்பிய அரசுகள் மிகுந்த கவனத்துடன் பார்க்கின்றன. அண்மையில் உருசியாவின் கடைசிப் போராட்டமாக உருவெடுத்துவரும் சேச்சினியா (CHIACHINYA) விடுதலைப் போராட்டத்தில், உருசியா படையை ஏவிக் கடுமையான தாக்குதல்களால் பல ஊர்களையும் மக்களையும் அழிக்கும் கொடுமையை ஐரோப்பிய அரசுகள் மிக வன்மையாகக் கண்டிக்கின்றன. அதே போராட்டம் ஐரோப்பிய நாடுகளுள் யாதானும் ஒன்றில் நடப்பதாக வைத்துக் கொண்டால் அதனைக் கையாளும் முறையே வேறு.

ஐரோப்பிய நாடுகளில் பல, துருக்கியச் சுலைமானின் படையெடுப்பாலும், நெப்போலியனின் நாடு பிடிப்பாலும், இட்லரின் அடிமைப் படுத்துதலாலும், சோவியத்துப் பொதுவுடைமை ஆட்சியினரால் கீழ்ப்படுத்தப்பட்டதாலும்., ஒவ்வொரு நாடும் விடுதலை உணர்ச்சியின் அளவு கோல்களை ஒருவாறு வரையறுத்தே வைத்துள்ளன. இதனாலேயே ஐரோப்பிய நாடுகளுக்குள் புகும் ஏதிலிகளைக் கூடியவரை நல்லமுறையிலேயே நடத்துகின்றன; போராளிகளின் விடுதலைக் கொள்கையையும் இவ்வண்ணம் சம உணர்வுடன் மதித்து நடத்துகின்றன.

இவ்வாறு மதித்து நடத்துவதன் கவர்ச்சிக்கும் ஏந்துக்கும் பிரதோனிய - பாசுக்கு - அல்சாசு - உலோரோன் மக்கள் ஆட்பட்டு,

தற்காலிமாக விடுதலைக் கொள்கையை மேலெடுக்காமல் இருந்து வருகின்றனர். இப்படிப் போராட்டத்தைச் சமன்படுத்தும் கொள்கை யாலேயே பல ஐரோப்பிய நாடுகள் உடைபடாமல் உள்ளன. அப்படி உடையும் நாடுகளும் பேரளவு ஏதத்தைத் தவிர்க்கும் வகையைக் கைக்கொண்டு வருகின்றன. சோவியத்து நாடுகளும் ஊசுகோசுலாவிய நாடுகளும், செக்கோ-சுலோவோகிய நாடுகளும் மிக மிக விரைவில் தங்கள் நாடுகளின் பகுப்பு முறைகளை வகுத்துக் கொள்ள முடிகின்றது.

சுவிட்சர்லாந்தில் ஆங்கில - பிரஞ்சு - செருமானிய - இத்தாலியப் பகுதிகள் தங்களுக்குள் போட்டியும் சண்டையும் வராமல் தற்காத்துக் கொள்ளும் அடிப்படையும் இதனாலேயே எனலாம்! வந்தேறி நாடான கனடாவிலும் இவ்வண்ணமே நிலத்தையும் மக்களையும் பொது வுணர்ச்சியுடன் பிரித்துச் சமமாக நடத்துகின்றனர்.

இதே நேரம் ஆசிய- ஆப்பிரிக்க நாடுகளில் என்ன நடக்கின்றது என்பதையும் நாம் பார்ப்போம்.

குருது இனமக்கள் துருக்கி, ஈராக்கி, ஈரான், ஆபுகானித்தானம் ஆகிய நாடுகளில் பரந்து பட்டுக் கிடக்கின்றனர். ஈராக்கின் குடித்தலைவர் சதாம் உசேன் பிறந்ததே குருது நிலத்தில்தான் என்பர். ஆனால், அந்தக் குருது இனமக்கள் தங்கள் நாட்டைப் பிரித்தெடுக்க முயற்சி செய்து கடந்த ஐம்பது ஆண்டுக்கும் மேலாகக் கடுமையாகப் போராடி வருகின்றனர். அவர்களை நாடு கடத்தும் முயற்சியிலும் அடியோடு கொன்றொழிக்கும் வெறியிலும் ஈராக்கைப் போலவே துருக்கியும் ஈடுபட்டு வருவதைச் செய்தி ஏடுகள் பறைசாற்றுகின்றன. அவர்களின் விடுதலை முயற்சிக்கு வேரிலேயே வெந்நீர் ஊற்றும் முயற்சியில் அந்நாடு கள் ஈடுபட்டு வருவதை, இதே ஐரோப்பிய நாடுகள் சில அரசியல் காரணங்களுக்காகக் கண்டும் காணாமல் வளரவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர்.

உலக நாடுகளின் பெயரால், இரண்டாம் உலகப் போரின் முடிவில் சப்பானையும் செருமனியையும் நேசநாடுகள் தம்தமக்குள் அதிகாரப் பகிர்வு செய்து கொண்டதைப் போல, வளைகுடாப் போரின் முடிவின்போது ஈராக்கைப் பிடித்து அதனை நேச நாடுகள் (!) பங்கிடவில்லை ஏன்? அப்படிப்பட்டிருந்தால் குருது மக்களின் பகுதியை ஈராக்கிலிருந்தும் மற்ற பகுதியை துருக்கியிலிருந்தும் சேர்த்து குருது நாட்டை (குர்திசுதான்) உண்டாக்கியிருக்கலாம்; அப்படிச் செய்யாததற்குக் காரணம் துருக்கி அமெரிக்காவின் படைத்தளமாக இருப்பதனாலும், ஈராக்கின் கன்னெய் (PETROL) குருது மக்களிடம் போவது நீண்ட கால ஐரோப்பிய நலன்களுக்கு எதிராக மாறிவிடும் என்பதாலும் தான்!

1928 முதல் - காந்தியடிகள் முதல் நெல்சன் மண்டேலா வரை எவ்வளவோ பேர் முயன்றும் தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் கொடுமையிலிருந்து தென்னாப்பிரிக்க மக்களை மீட்க முடியாமலே இருந்தது. திடீரென்று இப்போது மண்டேலாவைக் குடித்தலைவராகக் கொண்டு, பழைய வெள்ளையரே தொடர்ந்து நாட்டின் பொருளியலைக் கையில் வைத்துக் கொண்டு நாட்டை விருப்பம் போல் நடத்தும் வண்ணம் நிறவெறிக் கொள்கையையே நீக்கியதாக விளையாடி வருகின்றன ஐரோப்பிய நாடுகள். காரணம், காலம் காலமாக தென்னாப்பிரிக்காவில் விளையும் தங்கம், வயிரம், முதலாயினவற்றை வேண்டுமளவுக்கு எடுத்து ஐரோப்பியஅமெரிக்க நாடுகளில் வைத்தபின்னர், கருவூலம் வெறுமையாகும் நேரத்தில் கணக்காளரை மாற்றுவதைப் போலக் கருப்பரிடம் ஆட்சிப் பொறுப்பைக் கையளித்துள்ளது வெள்ளையர் ஆட்சி.

பாக்கித்தானில் கராச்சியையும் இந்தியாவில் காசுமீரம் - பம்பாயையும் அரசியல் - பொருளியல் காரணங்களுக்காகப் பகடைக் காய்களாக்கி முறையே இந்தியாவும் பாக்கித்தானும் விளையாடி வருகின்றன. அங்கே நடக்கும் உரிமைக் கிளர்ச்சிகளைச் சொந்தக் காரணங்களுக்காக வளர்த்தும் அடக்கியும் வருகின்றன இருநாடுகளும்.

திபேத்தைச் சீனாவும் சிக்கிமை இந்தியாவும் பிடித்து வைத் திருப்பதை சீனமக்களும் இந்தியரும் ஏதும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்த நாடுகளில் உரிமையுணர்வு யாருக்கும் தேவையில்லாப் பொருளாகிவிட்டது.

ஆசிய- ஆப்பிரிக்க நாடுகளில் உரிமைச் சிந்தனைகள் விளைவதை ஐரோப்பியர் விரும்புவதில்லை; காலங்காலமாகக் குடியேற்ற நாடுகளாக்கி ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளைச் சுரண்டிக் கொழுத்த ஐரோப்பிய நாடுகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னுள்ள அமைப்பின்படி குடியேற்ற நாடுகள் இருப்பதையே விரும்புகின்றன. அதற்கு வணிகம், பொருளியல் முதலிய அடிப்படைக் காரணங்கள் இருந்தாலும், அரசியல் காரணமே மிகவும் வலுவானது.

'பொது நலம்' (COMMONWEALTH) போன்ற அமைப்புகளின் போர்வையில் அக் குடியேற்ற நாடுகளின் தலைமைகள் ஐரோப்பிய நாடுகளின் செல்லப்பிள்ளைகளாகித் தம் மக்களையும் மீறிக் குடியேற்ற நாடுகள் அப்படியே இருப்பதை ஒப்புக் கொண்டு விட்டன. இவ்வளவு செய்தும் ஐரோப்பிய நடைமுறைச் சட்டங்களை மட்டும், குறிப்பாக விடுதலை கோரும் போராளிகளை நடத்தும் முறைகளைக் குறித்த சட்டங்களை மட்டும், பழைய குடியேற்ற நாடுகளின் பழைய கொடிய வழக்கத்தின்படியே நடப்பதை ஒப்புக் கொண்டுவிட்டன ஐரோப்பிய நாடுகள்.

இதன் காரணமாக ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் தம் நாட்டுப் போராளிகளைக் கொன்று குவிக்கவும், அவர்களைக் கீழ்மைப் படுத்தச் செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி வாயிலாகப் பொய்ச் செய்தி பரப்பவும் ஐரோப்பிய நாடுகள் விட்டு வைத்திருக்கின்றன எனலாம்.

உலக வைப்பகத்தையும் உலகமக்கள் ஒன்றியத்தையும் உலக உணவுச் சந்தை முதலான அனைத்து அமைப்புகளையும் கையகப் படுத்திக் கொண்டுள்ள ஐரோப்பியர் மனம் வைத்தால் படிப்படியாக ஐரோப்பிய நடைமுறைகள், சட்டதிட்டங்கள் ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிலும் நடைமுறைக்கு வந்திருக்கும்.

இதனால் தமிழீழச் சிக்கலை இந்தியர் கைகளில் அவர்களின் வழக்கப்படி தீர்க்கப்பட அமெரிக்கா முதலான வல்லரசுகள் விட்டுக் கொடுத்திருக்கின்றன.

இந்தியாவுக்குள் தமிழ்நாடு, புதுவை, என்னும் இரு தமிழ்நாடுகளும், கருநாடகம், மலையாளம், தெலுங்குதேசம் முதலான தமிழின நாடுகளும் இருப்பதால், தமிழீழச் சிக்கலுக்கு நடுநிலைத்தீர்வு காண இந்தியாவால் இயலாது. கடந்த கால வரலாற்றில் இந்தியா மேற்கொண்ட பேச்சுத் தீர்வு முறைகளும் அவற்றை நடத்த அனுப்பப்பட்ட பார்ப்பனியத் தூதர்களும் தமிழர் நலன்களுக்கு ஊறு விளையும் வண்ணமே செயற்பட்டனர். இனியும் இந்தியா தமிழருக்கு உதவும் என்பது, பாவாணர் ஐயா குறிப்பிடுவது போல் "அஃறிணையிலும் இழிந்த பகுத்தறிவின்மையையே காட்டும் !"

எனவே, தமிழீழச் சிக்கலுக்கு மற்றவர் தலையிட வேண்டியுள்ளது. தலையிடும் அளவுக்குத் தகுதியும் தலைமைப் பொருத்தமும் கொண்ட பொருளியல் வலிவும் அதிகாரமும் வாய்த்தவராலேயே தலையிடவும் தக்கபடி நாட்டின் சிக்கலைத் தீர்க்கவும் இயலும். அதற்குத் தகுதி படைத்த நாடுகளை ஆராய்வோம்.

## தென்மொழி நன்கொடை வரவுகள்

**(1–11–95 முதல் 28–2–96 முடிய)**

| | | |
|---|---|---|
| 1. | அ. நக்கீரன், விழுப்புரம் – | 100–00 |
| 2. | நிலாவழகன், வளசரவாக்கம் – | 500–00 |
| 3. | மருத்துவர் கோவிந்தனார், சென்னை – 17– | 20–00 |
| 4. | சி. கைலாசம், ஈரோடு – | 13–00 |
| 5. | மருத்துவர் அ. விசுவநாதன், – ஆத்தூர் – | 8–00 |
| 6. | சந்திரசேகரன், தூத்துக்குடி – | 300–00 |
| 7. | தங்கராசன், பறம்புக்குடி – | 150–00 |
| 8. | மு. தமிழ்நெஞ்சன், துரையூர் – | 25–00 |
| 9. | மரு. கோவிந்தனார், சென்னை –17– | 20–00 |

# தமிழரின் பொருட்டு ஓர் அழுகை!

*(பாவலரேறு ஐயா அவர்கள் கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் அயலகத் தமிழர்களின் நிலை குறித்து மனம் வருந்தி எழுதிய கட்டுரை இது. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கடந்த பல மாதங்களாகச் சாதிக் கலவரங்கள் வெடித்துக் கொடுமைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் ஆட்சியாளர்கள் சாதியுணர்வைத் தூண்டும் வகையில் சாதியின் அடையாளங்களாகச் சிலை திறப்பு விழாக்களும் பெயர் சூட்டு விழாக்களும் நடத்துவது குறித்து வருந்தி, ஐயா அவர்களின் கட்டுரையை ஈண்டு மீண்டும் வெளியிடுகிறோம். – ஆசிரியர்)*

தமிழர்கள் இவ்வுலகில் எங்குப் போய் வாழ்ந்தாலும் ஒரே உணர்வினராக- ஒரே வகைப் பண்பினராக வாழ்கின்றனர் என்பது ஓரளவில் மகிழ்ச்சி தருவதானாலும், பிறிதோரளவில் மிகவும் வருத்தம் தருவதாகவும் இருக்கின்றது என்பதை என் சிங்கை மலேசியச் சுற்றுச் செலவின் பொழுது உணரவேண்டி யிருந்தது. தாய் நிலந் துறந்து வேற்றுப் புலங்களில் வயிற்றுக்காவும் வாழ்க்கைக்காகவும் குடி பெயர்ந்து மலைகள் தாண்டியும் கடல்கள் தாண்டியும் சென்று வாழும் தமிழர்கள், பெரும்பாலும் கடந்த இரண்டு மூன்றாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத் தில் என்னென்ன வகையான உணர்ச்சிகளுடன் வாழ்ந்தார்களோ அவ்வவ் வகையான உணர்ச்சிகளுடனேயே அங்கும் போய் வாழ்ந்து வருகின்றனர். தங்கள் மொழிப்பற்றும் இனப்பற்றும் அவர்களின் நல்லுணர்வுகளாக இன்றும் ஆங்காங்கே பளிச்சிட்டு மிளிர்கின்றன என்றாலும், தமிழகத்தில் உள்ள மூடநம்பிக்கைகளும் அவர்கள் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துகொண்டிருப்பதைப் பலவிடங்களில் பலர்வயின் கண்டேன்; கண்டு மிகவும் வருந்தினேன்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் உள்ள தமிழர்கள் பலர், பல தலைமுறைகளைக் கண்டவர்களாக விளங்குகின்றனர் அவர்களுள் பெரும்பாலார் தங்கள் உடைகளிலும் உணவு முறைகளிலும் ஆங்காங்கு உள்ள பழக்கவழக்கங்களையே பின்பற்றி வருகின்றனர் என்றாலும், சிறுபான்மையினர் இன்றும் வேட்டி சட்டை உடுப்பவர்களாக இருப்பதையும் கண்டு மகிழ்ந்தேன். மேலும் தோட்டப்புறங்களில் வாழ்ந்து வருகின்ற தொழிலாளர்கள் குடியிருப்புகளில் புகுங்கால் தமிழகத்திற்குள் நுழைவது போன்ற ஓர் உணர்ச்சியே உண்டானது. சில இடங்களில் அரசமரத்தடி கோயில்களும் நம் பெண்களின் அரட்டை அளப்புகளும் எனக்குத் தமிழகச் சிற்றூர்ப் புறங்களையே நினைவூட்டின. ஆனால் இவ்வகை உணர்வுகளில் எல்லாம் என் உள்ளத்தில் தீப்போல் காந்தியவை, அவர்கள் தங்களுக்குள் இன்னும் விடாப்பிடியாகக் கொண்டிருக்கும் குல சமய வேறுபாடுகளேயாகும்.

சிங்கை மலேசியத் தமிழர்களுள் ஒரு கணிசமான பகுதியினர் இலங்கைத் தமிழர்களாவர். அவர்களும் தாய்த் தமிழகத்தினின்று

குடியேறிய பலரும் பெரும்பாலும் சிவனிய (சைவ)க் கொள்கையினராக இருந்தாலும் மாலிய (வைணவ) வழிபாடும் வேறுசில சிறுதெய்வ வழிபாடுகளும் கூட அவர்களிடையே இருந்து வருகின்றன. தமிழகத்துப் பிராமணப் பூசாரிகள் சிலர் சில கோயில்களில் இருந்து வழிபாடுகளுக் குதவுவதை நான் பார்த்து வியந்தேன், சிலரிடம் இதைப்பற்றிக் கேட்டபொழுது, அவர்கள் தமிழகத்தினின்று இதன் பொருட்டாகவே தருவிக்கப்பட்டனர் என்று விடை கிடைத்தது. சில கோயில்களில் தமிழக் குருமார்கள் சிலர் பூச்சார்த்திகளாக இருந்து வருவதும் குறிப்பிடத் தகுந்தது. கோயில்களைப் பற்றிய அமைப்புகளிலெல்லாம் தமிழக மணமே வீசுகின்றது. சிலைகளின் அமைப்பும் கோயில் மதில் சுவர்களின் தோற்றமும் வண்ணப் பூச்சுகளும் தமிழகத்தையே அங்கு உருவாக்கிக் காட்டுகின்றன. அவை முற்றம் தமிழகச் சிற்பிகளையே கொண்டு செய்யப்பட்டனவாகத் தெரிகின்றன. சிலவகைச் சமய மூடநம்பிக்கைகளையும் அங்குத் தமிழகத்தைப் போலவே காணநேர்ந்தது. ஆனால் இவற்றில் எல்லாம் கூட என் மனம் மிகவும் வருந்துமாறு ஏதும் நடந்து விடவில்லை. தமிழ் எவ்வாறு ஆரியக் கலப்பு நீக்கம் பெற்றுத் தூய்மையுற வேண்டியுள்ளதோ, அதுபோலவே தமிழர்களின் சமயவுணர்ச்சியும் ஆரியக்கலப்பு நீக்கம் பெற்றேயாகல் வேண்டும். அதைத் தொற்றிக் கொண்டுள்ள மூடநம்பிக்கைகள், மனவேறுபாட்டு நோய்கள் முதலியனவும் நீங்கியாகல் வேண்டும். அதுவரை நாம் கொண்டுள்ள சமயக் கோட்பாடுகள் முழுத்தூய்மை பெற்றனவாகவோ பொதுமை சான்றனவாகவோ எல்லா மக்கள் நலத்திலும் ஒரே படித்தான அக்கறை கொண்டுள்ளனவாகவோ கூறிப் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது.

இனி, சமய நிலைகள் ஒருபுறம் இவ்வாறிருந்தாலும், தமிழர்கள் தங்கள் தாய்நிலந் துறந்து அயல்நிலங்கள் நோக்கிக் கப்பல் ஏறும்பொழுது விடாப்பிடியாக அவர்கள் தமிழகத்திற் கொண்டிருந்த குலவேறுபாட்டுக் குப்பை கூளங்களையுமன்றோ, அவர்கள் வாழப்புகுந்த அயல்நாடுகளுக்கு வாரிக்கொண்டு சென்றிருக்கின்றார்கள்! இந்த உண்மைதான் என் நெஞ்சாங்குலையில் நெருஞ்சி முள்ளெனக் குத்திக் கொண்டுள்ளது. இவர்களின் அறியாமையை என்னென்பது! பெயர்களின் பின்னர் இன்னம் வாலிட்டு எழுதுவது, இடுகாடு சுடுகாடுகளில்கூடச் சிற்சில இடங்களில் குலப்பிரிவுகளைக் கையாள்வது, திருமண, இறப்பு நிகழ்ச்சிகளில் குலவேறுபாடுகளைத் தெற்றெனக் காட்டும் பழக்க வழக்கங்களை இன்னும் குரங்குப் பிடியாய்க் கைக் கொண்டிருப்பது போலும் தீய மூடப்பழக்கங்கள் தமிழர்கள் எத்துணையளவு நாட்டியல், குமுகவியல், பொருளியல் முன்னேற்றங் களைப் பெற்றாலும் தங்கள் மனங்களில் உள்ள மனக்கசண்டுகளை நீககிக் கொள்ளவே மாட்டார்கள் என்பதைத் தெளிவாகக் காட்டு கின்றன. தமிழகத்தில் உள்ள தலைவர்கள் சிலர் அவ்வப் பொழுது

"பொருளியல் முன்னேற்றம் ஏற்படுமானால் அந்தக் குல முறைகள் மூடநம்பிக்கைகள் எல்லாம் அடியோடு ஒழிந்துபோகும்" என்று கூறக் கேட்டிருக்கின்றேன். பெரும்பாலும் பொதுவுடைமைக் கொள்கை யினரும் பேராயக் கட்சிக் கொள்கையினர் சிலரும் இதைக் கூறி வருகின்றனர். இந்தக் கூற்றுக்கு மண்டையடி விழுந்திருக்கின்றது இங்கே! பொருளியலில் மட்டுமன்று-அறிவியலில் முன்னேறினால் கூட, சில சமய வெறிகளும் `சாதி' வெறிகளும் அறவே ஒழிந்து போகாமற் போனாலும் அடங்கியாகிலும் கிடக்குமா என்னும் ஐயப்பாடு என்னுள் பூதம்போல் வளர்ந்து விட்டது.

தமிழகத்தின்று ஓராண்டுக்கு முன் இங்குச் சுற்றுலாப் போந்த திரைப்படப் பாட்டாசிரியர் கண்ணதாசன் இங்குப் பேசிய கருத்து களைப்பற்றி அன்பர்கள் சிலர் வாயிலாகக்கேட்டுச் செவிகொதித்துப் போனேன். நிகரியக் கொள்கைகளையும், காந்தியப் பொதுமைக் கருத்துகளையும் பேசிவரும் அத் தமிழகக் குடிமகன், கோயில் கூட்டங்களிலேயே, கள்ளொழுகும் வாயுடன், "முருகன் எங்கள் செட்டிக் குலத்தைச் சேர்ந்த கடவுள். ஐமபெரும் பாவியங்களும் இரண்டு பெரும் பாவியங்கள் (சிலப்பதிகாரமும் மணிமேகலையும்) எங்கள் செட்டியினப் பாவியங்கள்" என்று கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டாராம். அதைக் கேட்டு, இங்கு வாழும் அவ்வினத்தவருள் பெரும்பாலோர் மிகவும் உடல் குளிர்ந்து போனார்களாம். (மேலும் அக் கண்ணதாசர் என்ன கூறினார் என்பதைக் கேட்கையில், அண்மையில் ஏதோ எம்.சி. இராமச்சந்திரன் தம் தேர்தல் விரகாண்மைக்காக. " நான் சொன்னால் தமிழகப் பெண்கள் தங்கள் கணவன்மார் பேச்சைக் கூடக் கேட்காமல் ஒப்போலைகளை எங்கள் கட்சிக்கே போடுவார்கள்'' என்று சொன்னதைத் தப்பறைகொட்டி வாய்ப்பறை கிழித்த பச்சைத்தமிழர் பலர் இதைக் கேட்டால் என்ன கூறுவார்களோ என்று மனங்கொதித்து நின்றேன். "நான் இங்குள்ள இத்தனைக் கடவுள்களுள் ஏன் கண்ணனை என் கடவுளாகக் கொண்டிருக்கின்றேன் என்றால் அவன்தான் பெண்கள் பலருடன் கூடிக்களித்திருக்கின்றான்; அவனைப் போல்தான் நானும்" - என்று கண்ணதாசத் தமிழர் பெண்கள் எல்லாரும் தலைகவிழ்ந்து நாணுமாறு பெரிய பொதுக் கூட்டத்திலேயே பெருமை பேசியிருக்கின்றார்.) (இதற்காகத்தான் போலும் இவர் தமிழகத்தில் கண்ணன் கோயிலைக் கட்ட முனைந்திருப்பதும், அதற்குப் பலரும் ஊக்கமாக நின்று ஆக்கந் தருவதும்...!) இந்நிலைகள் எல்லாம் குலவெறிக்கு எத்துணையளவு இங்கு வலிவூட்டப் பெற்று வருகின்றது என்பதையும், அவ்வெறி இங்கு எத்துணையளவு வேரூன்றியிருக்கின்றது என்பதையும் தெளிவாக உணர்த்தும்.

மேலும் இங்குப் பலவாறான 'சாதி' இயக்கங்கள் இயங்கிவருவதை யும், அவை தங்கள் இனவேறுபாடுகளைப் பலவாறு விரிவு படுத்திப்

பூசல்கள் இட்டுக் கொள்வதையும் காணுங்கால் தமிழன் நிலாமண்டிலத்திற்கே போய் வாழ நேரிட்டாலும் சாணிச் சட்டியில்தான் தன் தலையைத் தோய்த்துக் கொள்வான் என்றே உறுதியாக நம்ப வேண்டிருக்கின்றது. அவன் எத்தனை வகையான உடைகளை உடுத்தால் என்ன? எவ்வளவு உயர்ந்த உணவு வகைகளை உண்டால் என்ன? எத்தனை நாகரிகமுள்ள மக்களிடையில் போய் வாழ்ந்தால் தான் என்ன? அவன் உள்ளத்தில் குலவேறுபாட்டு முடை நாற்றமும், மூளையில் உயர்ச்சி தாழ்ச்சி யென்னும் மேடு பள்ளங்களும் அகற்றப் பெற்றுச் சமனிலைப் படாத வரை, தமிழகத்தின் குப்பை மேடுகளின் மலப்புழுவாய் அவன் நெளிவதும் அமெரிக்க அரசவை விருந்தினனாக அவன் உலாவருவதும் ஒன்றுதான்! அதனால் அவனுக்கோ பிறர்க்கோ என்ன பயன் ஏற்பட்டு விடப்போகின்றது என்பது விளங்கவில்லை.

இனி, என் அயலகச் செலவின் பொழுது நான் அறிந்து கொண்ட தமிழகச் செய்திகளுள் என்னை அதிரச் செய்தது, மதுரையில் நடந்த 'யாதவர்' மாநாட்டுத் தீர்மானந்தான். 'மொழி, மாநில வேறுபாடுகளை யெல்லாம் மறந்து இந்தியாவில் உள்ள யாதவர்களெல்லாரும் ஒன்றுபட வேண்டும்' என்றும் 'இனிமேல் தென்னகத்தில் உள்ள யாதவர்களும் கோனார், பிள்ளை என்னும் குலப்பட்டங்களை வைத்துக் கொள்வதை விட்டு விட்டு வடநாட்டினர் போல் 'யாதவ்' என்னும் பட்டத்தையே வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அம் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் பெரியார், அண்ணா, பாரதிதாசன் போன்றவர்களின் பகுத்தறிவுக் கொள்கையின்மேல் விழுந்த சமட்டி அடிகளாகும்! இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் மேனாட்டார் நிலாக் கோளுக்கும் செவ்வாய்க் கோளுக்கும் வலைவீசிக் கொண்டுள்ள காலத்திலும்-தமிழர்கள் இத்தகைய கீழ்மை நிலைக்கும் கூடப் போகத்தான் போவார்களென்றால் அவர்கள் கற்காலத்திற்கே கூடத் திரும்பிப் போவது நல்லது என நெஞ்சார நினைக்கின்றேன்.

'ஓ! தமிழ இனமே! நீ அடிமையாக வாழ்ந்தாலும் சரி; அரணாக வாழ்ந்தாலும் சரி; பதியெழுவறியாப் பழங்குடியாக-இருந்த இடத்திலேயே இருந்தாலும் சரி; அல்லது பதிபெயர்ந்து அகன்று பாரெங்கிலும் உள்ள நாடுகள் அனைத்திலும் போய்ப் பதிந்து வாழ்ந்தாலும் சரி; உன்னை நீயேதான் தாழ்த்திக் கொள்ளல் வேண்டும்; உன்னை நீயேதான் வீழ்த்திக் கொள்ளல் வேண்டும்! அத்தனையளவுக்கு ஆரியம் உன்னை அடிமாற்றியுள்ளது; திரிபு படுத்தி உள்ளது. அதன் அடிப்படையாக உள்ள இறுதி அணுவும் உன் உடலினின்று அறக்கழிந்தாலன்றி உன் குடிபெயர்ப்பாலும் பயனில்லை; கொடிச் சிறப்பாலும் உயர்வில்லை; நீ என்றென்றும் ஆரியத் தமிழனே! உன்னை ஈடேற்றுபவர் இனிப் பிறப்பாரா என்பது ஐயமே' என நெஞ்ச புழுங்குவதைத் தவிர வேறு வழியில்லை!

## பாட்டரங்கம்

### சிலிர்த்தெழுவாய்!

– விடியல்

*படித்தது போதும்; படைத்தது போதும்;*
*படைக்களம் நோக்கிப் புறப்படுவாய்! - சிலை*
*வடித்தது போதும்; வரைந்தது போதும்;*
*வாளினை எடுத்தே விரைந்திடுவாய்!...*

*சிரித்தது போதும்; சினந்தது போதும்*
*செருக்களம் குதித்துப் போரிடுவாய் - கலை*
*திரித்தது போதும்; திரிந்தது போதும்*
*துணிவுடன் இன்றே களம் குதிப்பாய்!...*

*விளைவுகள் போதும்; வீண்புகழ் போதும்;*
*விழித்துடன் களம்செல விரைந்திடுவாய் - இனக்*
*குலைவுகள் போதும்; குனிந்தது போதும்*
*கொடியவர் உயிர்அறக் குதறிடுவாய்!*

*மலைத்தது போதும் மகிழ்ந்தது போதும்*
*மானம் சிறிதே காத்திடுவாய் - மனம்*
*அலைந்தது போதும் அயர்ந்தது போதும்*
*அரும்புயல் நீயென உணர்த்திடுவாய்*

*பொறுத்தது போதும்; புன்மைகள் போதும்;*
*புயலெனச்சீறும் உரம்பெறுவாய்! - இகழ்*
*சிறுமனப் பகைவரைச் சிதறிடும் வகையினில்*
*சீறிடும் வேங்கையாய்ச் சிலிர்த்தெழுவாய்!...*

## நெருப்பிலும் படுப்போம்!

– பாவலர் இளஞ்சித்திரன்

*ஒன்றுதான் நமக்குயிர் இருப்பதும் ஒன்றுதான்!*
*உண்மைதான்; ஒருநாள் இறப்பதும் ஒன்றுதான்!*
*என்றுதான் தீரும் நம்துயர்? என்றுதான்*
*எழுந்தேன்! பாவல ரேற்றைத் தொடர்ந்தேன்!*
*குன்றுதான் தோள்கள்! குன்றாக் கொள்கைகள்!*
*கொண்டெடுத் துயர்த்திடல் வேண்டும் நன்றுதான்!*
*''வென்றுதான் வருவோம்! தம்பீ, நடப்போம்!*
*விரைக!'' என்றவர் உரைத்தார்! தென்புதான்!*

தென்புதான் அவர்தம் பாடல்கள்! உரைகள்!
திக்கிலாத் தமிழர்; நமக்கவை மறைகள்!
முன்புதாம் இழந்தோம்; உரிமைகள் தொலைத்தோம்!
மூண்டெழுந் தால்தான் உலகினில் நிலைப்போம்!
என்புதாம் எனினும் எடுத்துடன் கொடுப்போம்!
இன்னலம் தமிழ்க்கெனின் நெருப்பிலும் படுப்போம்!
தொன்றுதாம் தொட்ட தமிழ்க்கொடி பிடிப்போம்!
தூயநம் விடுதலைப் பட்டயம் படிப்போம்!

## குன்று போல் உயர்வாய்!

– செ.ப. இளவாணன்

தனித் தமிழ் இயக்கத்தில் ஐயா!
தகை சான்ற பேரொளி யாய்!
அணி வகுத்து அன்னைத் தமிழை – நீ
அனைவரும் போற்றச் செய்தாயே!

மொழியுணர்வு இல்லா மூடர்களாய் – தமிழர்கள்
வழி தவறிப் போனதை எண்ணி – இந்த
இழி நிலையை அகற்ற எந்நாளும் ஐயா நீ
ஏற்றிருந்த கொள்கை ஒளி அணைந்துவிட்டதா?

இருள் சூழ்ந்த நிலையில் தமிழகத்தை – ஐயா நீ
ஏங்க வைத்துவிட்டுச் சென்றதேன்?
அருள் உள்ளோரே ஐயா பெருஞ்சித்திரனாரின்
அரிய தொண்டினை ஆற்றி மகிழ்வீர்!

கைகட்டி வாய்பொத்தி வாழ்நாளெல்லாம் – தமிழா நீ
காலத்தைக் கடத்தி விட்டுப் பெருங்களத்தைச்சுமக்காதே
பை நிறைந்து விட்டால் போது மென்று தமிழா நீ
பைந்தமிழரின் பண்பாட்டினை மறந்துவிட்டு வாழ்வதோ?

இனம் மொழி எமது உயிர் என்றே – தமிழா நீ
இன்புற்று மகிழ்ந்திடவே வாழ்ந்திடு வாய்!
குணம் மாறாது கொள்கையும் மாறாது – தமிழா நீ
குன்று போல் உயர்வினையே பெற்றிட எண்ணிடுவாய்!

# விடிந்த நாள்

**வி**டிந்த நாள் மார்ச்சு 10. இன்று பாவலரேறு ஐயா அவர்களின் பிறந்த நாள். ஐயாவுக்கு என் வணக்கங்கள். கண்ணீரோடு கை கூப்புகிறோம். ஏற்றுக் கொள்ளுங்களய்யா!

கடந்த ஆண்டு 1995 மார்ச்சு 10- இதே நாளில் நடந்த நிகழ்ச்சிகளை எண்ணுகிறோம்; எண்ணுகிறேன். அந்நிகழ்ச்சிகளில் இயல்பான மகிழ்ச்சி. அடுத்த ஆண்டு இப்படி வறட்சியான நிலை ஏற்படும் என்ற எதிர்பார்பில்லாத-எண்ணமில்லாத மலர்ச்சி; பசுமை! இவ்வாண்டு சோர்ந்து போய் மெலிந்தநிலையில் தனித்து நிற்கின்றோம். நிற்கின்றேன்!

ஐயா பாவலரேறு அவர்கள் தம் உயிராகவும், ஆசானாகவும், தலைமையாகவும் எண்ணிப் போற்றிப் பின் பற்றிய திருவள்ளுவப் பெருமகனார், தந்தை பெரியார், மறைமலையடிகள், பாவாணர், பாவேந்தர் ஆகிய பெருமக்களையும் இந்நாளில் எண்ணிப் போற்றி வணங்குவோம்.

இன்றைய நாளில் நம் ஐயாவின் பெயர் சொல்லி அழைத் தவர்களுக்கும், தம்பி என்று செல்லமாக அழைத்தவர்களுக்கும், ஐயா என்று பண்பாக அழைக்கும் பெரியோர்களுக்கும், சான்றோர்களுக்கும், அறிஞர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், எல்லா இயக்கத்தலைவர்களுக்கும், அவ்வியக்க இளைஞர்களுக்கும், தமிழ்ச்சிட்டு பயிலும் மாணவ-மாணவியர்களுக்கும், தென்மொழி பயிலுநர்களுக்கும் தென்மொழிக் குடும்பங்களுக்கும், வெளிநாட்டில் உள்ள தமிழ்மக்களுக்கும், ஈழத்தில் போராடும் போராளிகளுக்கும், இன்னல்களுக்குள்ளாகியிருக்கும் ஏராளமான மக்களுக்கும் ஏதிலி எனப்பட்ட மக்களுக்கும் ஐயாவின் நினைவில் நின்று இவ்வாண்டு எல்லோரையும் எண்ணி வணக்கம் கூறிக்கொள்கிறேன். ஐயாவை எண்ணும் எண்ணத்தோடு எல்லாரையும் எண்ணி ஆறுதல்படுத்திக் கொள்ளவும் இதை எழுதுகிறேன்.

இந்த நாளில் நாம் ஒன்றுபட்ட நிலையில் கருத்து வேறுபாடுகளைக் களைந்துவிட்டு-மனவேறுபாட்டை நீக்கிக் கொண்டு கொள்கைக்காக - தமிழுக்காக இனத்திற்காக நாட்டுக்காகப் பெரும்பணியைச் சுமந்து நடந்த நம் ஐயா விட்டுச் சென்ற பணியை இணைந்து செய்வோம். அவர் செய்த பணியோ இருட்டு வேளையில், கரட்டுப் பாதையில், முரட்டுக்காளை களை, உடைந்த சக்கர வண்டியில் பூட்டி ஓட்டுகிற நிலையில் தம் கொள்கையான தமிழ், இன, நாட்டு உரிமை மீட்கப் பட்டபாடு கொஞ்ச நஞ்சமன்று. அந்தப்பாடு அவருக்குப்பின்தான் மிக விளங்குகிறது. அவரின் நீண்ட இலக்கில் குடும்பத்தை எளிதாக்கிக் காட்டி இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்தும் காட்டிச் சென்றார்.

அப்பெரிய கொள்கை வாழ்வையே நாமும் கடைபிடித்து, தமிழ், இன, நாட்டு உரிமை பெற பாடுபட இந்த மார்ச்சு 10-இல் உறுதி எடுத்துக் கொள்வோம். பொய்மையை நீக்கி மெய்யானதைச் செய்வோம்! அது பூத்து, காய்த்து, பழுக்கும் - குலை தள்ளும்!

— தாமரை பெருஞ்சித்திரனார்

# இழந்த மண்ணை மீட்போம்! இருக்கும் மண்ணைக் காப்போம்!

திருவிதாங்கூர் ஆட்சிப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் விழிப்புணர்வுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் செயற்பட்டுத் தங்கள் பகுதிகளைத் தாய்த்தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்பதற்காகத் திருவிதாங்கூர்த் தமிழ்நாடு பேராயம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி ஒன்றுபட்டுப் பல போராட்டங்களை நடத்தி னார்கள். எண்ணற்ற ஈகங்களைப் புரிந்தனர். இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு முன்பேயும், கேரள மாநிலம் உருவாவதற்கு முன்பேயும் அவர்கள் தங்களுக்கென்று ஓர் அமைப்பை நிறுவிப் போராடியது வியப்பிற்குரியதாகும். குமரித் தமிழர்களின் போராடத்திற்குத் தாயகத் தமிழர்கள் போதுமான ஆதரவு நல்கவில்லை இந்திய தேசிய மயக்கத்திலும், திராவிட மயக்கத்திலும் தாயகத் தமிழர்கள் ஆழ்ந்து கிடந்தார்கள். அவர்களின் ஒத்துழைப்பு இல்லாவிடிலும் குமரித் தமிழர்கள் மனம் சோர்வடையாமல் விடாமுயற்சியோடும் போராடி தமிழகத்தோடு தோவாளை வட்டம், அகத்தீசுவரம் வட்டம், கல்குளம் வட்டம், விளவங்கோடு வட்டம், செங்கோட்டை நகர்ப்பகுதி ஆகியவற்றை இணைத்த வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் வரலாறாகும்.

தாய்த் தமிழகமும் அவர்களுடன் இணைந்து விடாப்பிடியாகப் போராடியிருந்தால் தேவிகுளம் வட்டம், பீர்மேடு வட்டம், செங் கோட்டை கான் பகுதி, நெய்யாற்றங் கரை வட்டம், நெடுமங்காடு கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளும் தமிழகத்தோடு இணைந்திருக்கும்.

**வடஎல்லை :**

தமிழகத்தின் வட எல்லையான வேங்கட மலையை உள்ளடக்கிய சித்தூர் மாவட்டத் தமிழர்கள் தங்கள் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வடஎல்லைப் பாதுகாப்புக்குழு ஒன்றைச் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் தலைமையில் நிறுவினார்கள். தளபதி கே. விநாயகம், மங்கலங்கிழார் போன்றவர்கள் முன்னின்று போராடினர். இவர்களின் போராட்டத்தின் விளைவாகத் திருத்தணி வட்டமும் மேலும் சில கம்ம (கிராம)ங்களும் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டன. தாய்த்தமிழகம் போதுமான ஆதரவு தராததால், சித்தூர் வட்டம், சந்திரகிரி (திருப்பதி) வட்டம், திருக்காளத்தி வட்டம், பாமனேறு வட்டம், குப்பம் சமீன் பகுதி ஆகியவை பறிபோய்விட்டன.

தொல்காப்பியர் காலந்தொட்டுத் தமிழ்நாட்டின் வட எல்லையாகத் திகழ்ந்த வேங்கடமலையை நாம்பறிகொடுத்தோம் தாய்த்தமிழர்களுக்கு விழிப்புணர்வும், தொலைநோக்குப் பார்வையும் இல்லாததால் இது நிகழ்ந்தது.

**மேற்கு எல்லை :**

பாலக்காடு வட்டம், கொல்லங்கோடு கான்பகுதி, கொள்ளே காலம் வட்டம், கோலார் தங்கவயல், வெங்காலூர் தண்டுப் பகுதி ஆகியவை வரலாற்றுக் காலம் தொட்டு தமிழர்களுக்கு உரிமையான பகுதியாக இருந்த போதிலும் இப்பகுதிகளில் வாழும் தமிழர்கள் குமரித் தமிழர் களைப் போல போதுமான விழிப்புணர்வோ, ஒற்றுமையுணர்வோ கொள்ளவில்லை. தாய்த் தமிழகமும் இவர்களைப் பற்றிக் கவலைப் படவில்லை. எனவேதான் இப்பகுதிகளை நாம் இழந்தோம்.

**கிழக்கு எல்லை :**

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்ததைப் போலத் தமிழருக்குச் சொந்தமான கச்சத்தீவை இந்திய அரசு இலங்கை அரசுக்குத் தாரை வார்த்து விட்டது.

தமிழருக்குரிய அந்தமான் நிக்கோபார் தீவுகளின் ஆளுமையை இந்திய அரசே மேற்கொண்டு விட்டது.

தமிழ்நாட்டுடன் ஞாயமாக இணைக்கப்படவேண்டிய தமிழ்ப் பகுதிகள் கேரளம், கருநாடகம், ஆந்திர மாநிலங்களுடன் இணைக்கப் பட்டதால் அங்கு வாழும் தமிழர்கள் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இப்பகுதிகளிலிருந்து தமிழர்களை விரட்டியடிக்க முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

பறிபோன தமிழ்ப்பகுதிகளில் உருவாகியுள்ள இந்த ஏதத்தை (அபாயத்தை) விடப் பெரிய ஏதம் தாய்த் தமிழகத்திலேயே உருவாகி வருகிறது. தாய்த் தமிழகத்தைச் சேர்ந்த குமரி மாவட்டத்தையும் நீலமலையில் உள்ள கூடலூர் வட்டத்தையும் மீண்டும் கேரளத்துடன் இணைக்க வேண்டும் என்றும் நீலமலை மாவட்டத்தைத் தமிழகத்தி லிருந்து பிரித்துத் தனிப் படுகர் மாநிலமாக்க வேணடும் என்ற கூக்குரல் கிளப்பப்பட்டுள்ளது.

*– நன்றி. 'தமிழன் இழந்த மண்' – (பக்81.82)*

# மக்களவை

## இன்னுமா தீக்குளிப்பது?

'**அ**யலவன் படையெடுத்து வருகின்றான்; நாம் அழிவது உறுதி என்று எண்ணி ஊர்மக்கள் தீயிட்டுக் கொண்டு இறந்தார்களாம் அன்றொருநாள் தமிழக ஊர் ஒன்றில். இன்றைக்கு என்னென்ன கரணியங்களுக்காகவோ தீக்குளித்தல்கள் நடைபெறுகின்றன. இந்திரா இறப்பைத் தாங்காமல் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். சிலர். இராசீவுக்கும் தொடர்ந்தது. இந்நிகழ்வுகள் .

மக்கள் பணத்தைக் கோடி கோடியாய் கொள்ளையடிக்கும் தங்கள் கட்சித் தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டால் அல்லது பதவி விலகுவதாக அறிவித்தாலே தீக்குளித்துச் சாகின்றனர். அவர்களின் வழியில் அல்லாமல்....

இந்தியை எதிர்த்துச் சின்னசாமியும் அரங்கநாதனும் இன்னும் எட்டுத் தமிழரும் தீக்குளித்துச் செத்தார்கள், அன்றொரு நாள்; ஈழத் தமிழர்களின் துன்பநிலைக்கு இரங்கித் தம் இன்னுயிரைப் போக்கிக் கொண்டனர், இன்றுங்கூட சில தமிழ்நாட்டுத் தமிழர்கள்; அவர்களின் வழியில்- இன்று தன்மானமுள்ள இளந்தளிர் அப்துல்ரவூப் இறந்தான். தன் இன்னுயிரை ஈந்திருக்கிறான் ஈழத் தமிழர்களுக்காக!

சிங்களப் படை புகுந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில்; முன்பு எரிந்தது யாழ் நூலகம் இதே சிங்கள வெறிப்படையால். இன்று எரிந்தது யாழ்நகர். அதே சிங்கள வெறிப்படையால். அங்கே பறக்கிறது **'அரிமாவின்'** உருவம் பொறித்த **சிங்களக் கொடி.** ஈழத்தமிழர்களை இன்றும் இன்னமும் அழிக்கும் சிங்களவன் அணி - விளையாட்டு அணி - இதோ இங்கே - இந்தத் தமிழ்நாட்டுக்கு - தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு அதே அரிமாக் கொடியாம் 'சிங்களக்'கொடி ஏந்தி வருகிறதாமே! கேள்விப்பட்டான் பெரம்பலூர் இளைஞன் **அப்துல் ரவூப்.**

தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் சின்னம் **'சிங்கம்'** தொடங்கி வைக்கவிருப்பதோ **'நரசிம்மம்'** சிங்களவனின் தமிழின அழிப்புக்கு நேரடியாகவும் , மறைமுகமாகவும் உதவும் நரசிம்மர்.

ஈழப் போரினால் ஏதிலியர் ஆயினர் எண்ணிறந்த தமிழ்மக்கள். தவித்தது தமிழகம்; உணவு, மருந்து, அரத்தம், பண்டம் பொருள் என்று

திரட்டிச் செங்குறுக்கைக் கழகத்திடம் ஒப்படைத்தார்கள்; ஆனால் அக்கழகத்திற்கு இசைவு கிடைக்கவில்லை. இன்றுவரை அப்பொருள்கள் ஈழத் தமிழர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அவர்களுக்கு எவ்வளவு உணவு தேவைப்படும் என்று புள்ளி விளக்கம் கூடத் திரட்டக்கூடாது என்று உலக நாடுகள் உதவி நிறுவனத்திற்குத் தடை போடப்பட்டுள்ளது.

திசம்பர் மாதம் முதல்கிழமையில் மட்டும் நோய்க்கு மருந்து இன்றி இறந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் 300 பேர். ஆனால் பக்க வீழ்ச்சி நோய்க்கு மருத்துவம் செய்து கொள்ளப் பண்டாரநாயகா (இன்றைய சிங்களத் தலைவியின் அம்மா- அன்றைய, தமிழின அழிப்பு நாயகி) திருவனந்தபுரத்திற்கு 30-11-95 - இல் சக்கர நாற்காலியில் உட்கார்ந்து வந்திறங்கிய கேரள ஆளுநர் மாளிகையில், மூன்று கிழமைகள் நல்ல பாதுகாப்போடு தங்கி மருத்துவம் செய்து கொண்டு திரும்பிய செய்தி ரவூப்பின் சினக்கனலுக்கு மேலும் தீயூட்டியதோ? இலங்கை அணி இங்கே வரகூடாதென்று தமிழர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்தும் பாமக, மதி.மு.க. போன்ற கட்சிகள் போராட்டம் நடத்துவோம் என்று கடுமையாக எச்சரித்தும் "இலங்கை அணி வருவதைத் தடுக்க முடியாது அவர்களுக்கு முழுப்பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தமிழினப் பகையாயுள்ள தமிழ்நாடு அரசு கொழுப்புடன் அறிவித்தது. சென்னை நகரச் சாலையெல்லாம் - சுவரெல்லாம்-பேருந்துகளில் எல்லாம் 'சிங்கம்' சின்னம்.

> *"அதோ என் தமிழரைச் சிங்களர் கொல்வார்*
> *ஆடும் என் சதை, நரம்பு எல்லாம்"*

- என்ற பாவலரேறு ஐயா அவர்களின் பாட்டிற்கு ஆடியதோ, அவ்விளைஞனின் சதையும், நரம்பும்?

அதே பாட்டில் வரும் ஐயா அவர்களின் உணர்வு வரிகள்,

> *"அடடா உலகம் கேட்டிடும் பார்த்திடும்*
> *ஆயினும் அதன் மனம் கல்லாம்!"*

என்று அவன் விம்மி இருப்பானோ? தணலிடைப்பட்ட புழுப் போலத் துடித்தானோ? அந்தத் தணலுக்கே தன்னுயிரை அளித்துவிட்டு அழியாப்புகழ் பெற்றான்.

உன் ஈகத்திற்கு நாங்கள் தலைவணங்குகின்றோம்! ஆனால் இன்னும் எத்தனை காலத்திற்கு நாம் தீக்குளித்துக்கொண்டிருப்பது!

**— சுடரொளி**

# தன்னைத்தானே விழுங்கும் பாம்பு

மா. பூங்குன்றன்

**வே**தியியல் நூல் ஒன்றில் மீள் வினையை விளக்குவதற்கு ஓர் உவமை கூறப்பட்டிருந்தது. ஒரு பாம்பு தன் வாலையே விழுங்குவது போல் ஓர் எடுத்துக்காட்டு அது. இந்த எடுத்துக்காட்டை மட்டும் எண்ணிப் பார்ப்போமானால் அவ்வாறு முழுவதுமாக விழுங்க முடியுமா? ஆனால் வேடிக்கைக் காட்டுபவர் ஒருவர் 'தன்னைத்தானே விழுங்கும் பாம்பு' என்று விளம்பரப் படுத்துவாரேயானால் உண்மையிலேயே ஒரு பெருங்கூட்டம் பார்க்கச் செல்லும். பார்க்கச் செல்பவர்கள் அனைவர்க்கும் இது நடக்க இயலாது என்று தெரிந்தாலும் இதில் என்ன கண்கட்டு இருக்கும்; அதை எவ்வாறு காட்டுகிறான் என்பதைப் பார்க்கவாவது செல்வர். ஆனால் பாம்பு விழுங்குவதாக ஏமாற மாட்டார்கள். இதே போல் இன்னொரு செய்தியைப் பார்ப்போம். அதுவும் இதே போன்று ஏமாற்று நாடகம். ஆனால் மக்கள் அதை நம்பியும் விடுகின்றனர். அஃது ஓர் அரசியல் நாடகம்.

ஆதி இராசாராம் அடிதடிச் செய்தி முதல் அவாலா மோசடிச் செய்தி வரை இன்றைக்கு நாளொரு செய்தி பொழுதொரு நடப்பாக செய்தித்தாளை அல்லோலப்படுத்துகின்றன. இந்த உள்ளூர்ச்சிக்கல் முதல் உலகச் சிக்கல் வரை இன்றைக்கு அரசியல்காரர்களே பங்கெடுத்துக் கொள்கின்றனர். நாட்டில் உள்ள கொள்ளைக்காரர்கள், அடியாட்கள், மோசடிப் பேர்வழிகள் அனைவரும் ஒன்று திரண்டு இன்றைக்கு அரசியலுக்குள்தான் உள்ளனர். அதிகாரிகள் பட்டியலிலும், அமைச்சர் பட்டியலிலுங்கூட இவர்கள் பெரும்பங்கில் உள்ளனர். வாய்ப்பு உள்ளவர்கள் ஆளுங்கட்சியிலும், வாய்ப்பு குறைந்தவர்கள் எதிர்க் கட்சியிலும் இருந்து கொண்டு மக்களை அல்லல்படுத்துகின்றனர். பெரும்பாலும் சட்டத்திற்குட்பட்ட பணப்பறிப்பு, கூட்டுக் கொள்ளைகள் ஏராளமாக நடைபெறுகின்றன. சில நடப்புகள் மட்டும் சட்டப் புறம்பாகப் போய்விடுகின்றன.

இவர்களின் மேல் காவல்துறை நடவடிக்கை, நடுவண் புலானய்வு (சிபிஐ) உசாவல். அறமன்ற நடவடிக்கைகள் சிறைப்பிடிப்பு நாடகங்கள், பிணையல் (Bail) தளர்வுகள், மீண்டும் பிணையல் நீக்கம், உடனே நெஞ்சுவலி போன்ற நடிப்புகளால் மருத்துவமனை முயற்சிகள், இவைபோன்ற அரசும் அரசியல்காரர்களும் நடத்தும் காட்சிகளை அன்றாடம் தாளில் படிக்கிறோம்.

அரசு எந்திரத்தின் ஒரு பகுதியாகத் தேர்ந்த இவர்களை, இவர்களுக்குக் கீழ் இயங்குகின்ற - அடங்கிய பகுதிகளான காவல் துறைகளும், அறமன்றத் துறைகளும், புலனாய்வுத்துறைகளும் கட்டுப்படுத்த முடியுமா? நேர்மை என்ற பெயரில் தாமே கட்டுப்பட்டால் ஒழிய இவையெல்லாம் வெறும் நாடகந்தானே. கூட்டமாகப் பின்னி இயங்கும் அரசியல் அதிகாரமுள்ள அரசியல்காரர்களுக்கு முன் தனி அதிகாரிகளும், அறமன்ற நடுவர்களும் மாறாக இயங்கிவிட முடியுமா? ஏரண முறையில் பார்த்தாலும் இது முரண்பட்ட நடவடிக்கையே. கீரியும் பாம்பும் வைத்துக் காட்டப்படும் வேடிக்கை போன்றதே. அரசு இயந்திரமே தன்னைத்தானே தண்டனை கொடுத்துக் கொள்வது என்பது பாம்பு தன்னைத்தானே விழுங்குவதை ஒத்ததே.

மக்களை முழுவதுமாக ஏமாற்றும் இந்தத் திட்டம் எங்கிருந்து தொடங்கியது. இதுபோல் தீட்டுவதால் மக்கள் ஏமாற முடியும் என்று திட்டமிட்டது எப்படி?

இது போன்றதொரு திட்டம் - முரணான ஓர் அமைப்பு ஆரிய மறையிலேயே உள்ளதை நாம் காண்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்த இந்த வரிகளை இப்போது ஒப்பிட்டுப் பார்ப்போம்.

*'தெய்வா தீனந் ஜகத்ஸர்வம்*
*மந்த்ரா தீனத்து தைவதம்*
*தன்மந்த்ரம் ப்ராஹ்மணா தீனம்*
*ப்ராமணா மமதைவதம்.'*

மக்களினப் பிரிவுகளுள் ஒரு பிரிவினரான பிராமணர் உட்பட அமைந்துள்ள உலகம் அனைத்தும் தெய்வத்துள் அடக்கம்; தெய்வம் மந்திரத்துள் அடக்கம்; மந்திரம் பிராமணருள் அடக்கம்; ஆதலால் பிராமணரே நம் தெய்வம். இந்த முரண்பாட்டு அமைப்பே இப்போதும் இருப்பதைக் காண்போம்.

உலக இயற்கை அமைப்பிற்குக் கட்டுப்பட்ட பிராமணன், உலகைக் கட்டுப்படுத்துவதாகக் கருதப்படும் தெய்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டுள்ளான் என்பது உண்மையானால்,

அரசியல்காரர்களுக்குக் கட்டுப்பட்ட அரசு; அரசுக்கு கட்டுப்பட்ட அதிகாரிகள் மீண்டும் அரசியல்காரர்களை அவர்களின் அதிகாரக் காலத்தில் கட்டுப்படுத்த முடியும் என்பதும் உண்மையாக இருக்க முடியும்.

பாம்பு வேடிக்கையினும் படுகீழான ஏமாற்று!

# நூறாசிரியம் வெளியீட்டு விழா

**பா**வலரேறு ஐயா அவர்களின் விழுமிய படைப்பிலக்கியமான நூறாசிரியத்தை முழுமையான அளவில் நூல்வடிவில் கொணரக் கருதி அதற்கான செயற்பாடுகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், பிறிதொருபுரம் வெளியீட்டு விழாவுக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை - தியாகராயர்நகரிலுள்ள செருமன் அரங்கத்திற்கு முழுத்தொகையும் செலுத்திப் பதிவு செய்யப்பெற்றது; விழாவில் பங்கேற்கும் அறிஞர் பெருமக்களிடம் அஞ்சல் வழியாகவும் நேர்முக முகமாகவும் இசைவுபெறப்பட்டது. அழைப்பிதழ்களும் சுவரொட்டி களும் அணியமாயின; செய்தித் தாள்களுக்கும் செய்தி விடுக்கப்பெற்றது.

இந்நிலையில் விழாவுக்கு ஒருநாள் முன்னர் முன்னாள் முதல்வர் ம.கோ.இரா. பெயர்தாங்கிய இசைக்கலைக் குழுவைச் சார்ந்த சிலர் நூல்வெளியீட்டுக் குழுவினரை வந்து சந்தித்து விழாநாளில் குறித்த நேரத்தில் தாம் ஒரு நிகழ்ச்சியைச் செருமன் அரங்கில் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும், அந்நிகழ்ச்சிக்கு அமைச்சர் ஒருவர் வருகைதர இருப்பதாகவும், எனவே நூல் வெளியீட்டு விழாவை மாலை ஏழு மணிக்கே முடித்துக்கொள்ளுமாறும் வேண்டியது மட்டுமல்லாமல் மறைமுகமான அச்சுறுத்தலும் விடுத்துச் சென்றனர். நூல்வெளியீட்டுக் குழுவினர் விழாவை அவ்வாறு முடிக்க இயலாது என்று மறுத்துரைத்துவிட்டுச் செருமன் அரங்க மேலாளரைத் தொடர்பு கொண்டபோது அக்கலைக்குழுவினர் பணங்கட்டிப் பதிவு செய்ய வில்லை யென்றும் வேண்டிக்கொண்டதனால் நேரில் பேசிக்கொள்ளு மாறு கூறியனுப்பிய தாகவும் அவர்கூறினார்.

மறுநாள் விழாக்குழுவின் சார்பில் புலவர் இறைக்குருவனார் மாநகரக் காவல்துறைத் துணை ஆணையர் விசயகுமார் இகா.ப. அவர்களைச் சந்தித்து முறையிட்டுப் பாதுக்காப்புக்கோரியபோது, அவர் நெடுநேரங் காக்கவைத்துப் பின், செருமன் அரங்கம் உள்ள சரகமான தேனாம்பேட்டைக் காவல் நிலையத்துக்குத் தொலைபேசியில் கூறி ஆவன செய்வதாகக் கூறி அனுப்பினார். ஆனால் மறுநாள் தேனாம்பேட்டைக் காவல் நிலையத்தின் ஆய்வாளர், பாட்டாளி மக்கள்கட்சி ஊர்வலப் பாதுகாப்புப் பணி இருப்பதால் தாம் ஏதும் செய்வதற்கில்லை யென்று கூறி நழுவிக்கொண்டார்.

*திட்டமிட்டபடி நூறாசிரியம் வெளியீட்டு விழா திபி2027 மீனம் 3 காரியன்று (16-3-96) பிற்பகல் 4 மணியளவில் திருக்குறள் மணி புலவர்*

இறைக்குருவனார் தலைமையில் தொடங்கியது. திருமா. பூங்குன்றன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நூலைவெளியிட்டு உரையாற்றுமாறும், நூல் கருத்துரையாற்று மாறும் வேண்டிக்கொள்ளப்பெற்றிருந்த அம்மா முனைவர் சாயினியார் அவர்களும் ஐயா முனைவர் சாலையார் அவர்களும் உடல் நலமின்மை யால் வருகைதர இயலவில்லை. ஆகவே, இலண்டனிலிருந்து வருகை தந்திருந்த தமிழ்ப்பெருமகனார் வைகுந்தவாசன் அவர்களை நூல் வெளியிட்டு உரையாற்றுமாறு விழாக்குழுவினர் கேட்டுக் கொண்டபடி அவர் இசைந்து நூலை வெளியிட்டு உரை வழங்கினார்.



தென்மொழி சுபதிருமாறன், புலவர் ஆறுமுகம், திரு. அருள்மணி, புலவர் அரசமாணிக்கனார், திரு. மா.செ. தமிழ்மணி, திரு.பறம்பை அறிவன், திரு.கோ. நக்கீரன் ஆகியோர் நூலைப் பெற்றுக்கொண்டு ஏற்புரையாற்றினர். திரு. கழராம்பன் சார்பில் அவர் துணைவியார் இளவேனில் அம்மையார் ஏற்புரையாற்றினார்.

திரு. வைகுந்தவாசன் அவர்களின் வெளியீட்டுரைக்குப்பின் சொல் லாய்வு அறிஞர் அருளியார் அவர்கள் நூல் அறிமுகவுரை யாற்றினார்.

அடுத்து, தி.மு.கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் க.அன்பழகனார் அவர்கள், பாவலரேறு அவர்களின் தமிழ்ப்பணி குறித்தும், நூறாசிரியம் நூல்பற்றியும் ஒருமணிநேரம் உரைநிகழ்த்தினார்.

தொடர்ந்து முனைவர் நன்னன், முனைவர் அரசேந்திரன், முனைவர் கடவூர் மணிமாறன், திரு. பழ. கருப்பையா திரு. இராபாவாணன் ஆகியோர் உரையாற்றினர் இறுதியில் சிலம்பொலி செல்லப்பனார் உரைநிகழ்த்தினார். அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் நன்றி நவில விழா நிறைவுற்றது.

முனைவர் கடவூர் மணிமாறன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே ம. கோ. இரா. பெயர் தாங்கிய கலைக்குழுவினர் இடையூறு செய்யமுற்பட்டனர். தென்மொழி அன்பர்கள் அவர்களைத் தடுத்து அமைவுகூறித் தேக்கிவைத்திருந்தனர். ஆயினும் பேச்சாளர்கள் ஓரளவுச் சுருக்கமாகவே பேச நேர்ந்தது.

அது மட்டுமல்லாமல் விழா நடைபெறும் நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் மிகப்பெரிய பேரணி யொன்று சென்னையைக் குலுக்கியவாறு சென்றமையால் ஆங்காங்கு ஊர்திகள் திசைமாற்றி விடப்பட்டமையாலும் போக்குவரத்து நெரிசலாலும் விழாவிற்கு வந்தவர்கள் பலவாறு அலைக்கழிவுற்றும் காலங்கடந்தும் வந்து சேர்ந்தனர். வரவியலாதவர்களும் பற்பலர்.

# தலைமாறு

ஒரு சொல் கேளீர்!

– குழந்தை

**கொ**ண்டுங் கொடுத்தும் வாழ்வது குமுகாய வாழ்க்கைக் கூறுகளுள் சிறப்பிடம் பெறுவதாகும். விளைபொருளும் செய்பொருளும் பெருகப் பெருக மக்கள் தத்தம் நிலைகளுக்கேற்பத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்குப் பண்டமாற்று முறை தோன்றி வணிகமாக வளர்ந்து தழைத்தோங்கியுள்ளது.

கொள்வதற்குரிய மாற்றுப் பொருளாக அல்லது வணிக ஊடகமாகப் பொன்னுங் காசும் புழக்கத்துக்கு வந்துவிட்டன ஆயினும் பொருளுக்கு ஈடாக வேறுபொருளை மாற்றிக் கொள்ளும் முறை அடியோடு மாறிவிடவில்லை; இனியும் மாறாது!

ஒருவரால் உதவி செய்யப் பெற்றவர், அவருக்குச் செய்யும் எதிருதவி கைம்மாறு எனப்படும். இவ்வெதிரீடு உதவிக்கு உதவி என்ற அளவினதே யன்றி இணையான மதிப்புடையதாக இருத்தல் வேண்டும் என்பதில்லை.

பண்டமாற்று முறையில் பொருளை ஒன்றனுக்கு ஒன்று மாற்றிக் கொள்ளும்போது அப்பொருள்கள் துல்லியமான அளவில் சமமதிப் புடையனவாக இருத்தல் வேண்டும். இவ்வாறு மாற்றிக் கொள்வதைக் குறிக்கத் 'தலைமாறு' என்னுஞ் சொல் பண்டுதொட்டுப் பயின்று வந்துள்ளது.

*"...இந் நான் கெல்லை யுட்பட்ட நீ(நிலம்) குழி (640) விட்டு இதுக்குத் தலைமாறு இந்த மாங்கொல்லைக் குழி 640 ஆகக் குழி...."*

எனத் தில்லைக் கல்வெட்டு ஒன்றிலும் (276/1913)

*"வாணகோவரையர் கட்டுவிக்கின்ற அரையகளாதித்தப் பேரேரிக்கும் கொல்லியூர் நிலம் ஏரிகோளான நிலத்துக்குத் தலைமாறு விட்ட நிலம்......"*

எனத் திருக்கோயிலூரை யடுத்த சண்பைக் கல்வெட்டிலும் , இவ்வாறு பிறகல்வெட்டுகள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளமையால் தலைமாறு பற்றி யறியலாம். 'பரிவர்த்தனை" 'எக்(ஸ்)சேஞ்' என்னும் அயன்மொழிச் சொற்கள் ஆட்சி பெற்றமையால் தலைமாறு வழக்காற்றில் நிலைமாறி யுள்ளது.

இதே போன்று ஒருவருக்கு மாற்றாக அதே தகுதியுடையவரை அமர்த்துதலும் தலைமாறு எனப்பட்டது.

*"...இவர்களில் (தளிச்சேரிப் பெண்டுகளில்) செத்தார்க்கும் அநாதேசம் சென்றார்க்கும் தலைமாறு அவ்வவர் வழியினரே."*

எனவரும் தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டால் இதனை யறியலாம்.

இவையே யன்றிப் பல்வேறு வகையில் கொண்டு கொடுத்து ஈடாக மாற்றிக்கொள்ளுஞ் செயல்களிலும் தலைமாறு என்னும் சொல்லாட்சி மிகுந்து காணப்படுகின்றது.

# செய்திகள்

**குடியரசி – துரை திருமண வரவேற்பு :**

சென்னை-மணலி புதுநகர் மொழிப்போர் ஈகி கருணாநிதி-சகுந்தலை ஆகியோர் மகள் குடியரசி- வால்பாறைக் கருப்புசாமி-முப்புடாதி ஆகியோர் மகன் துரை இவர்கள் திருமணவரவேற்பு விழா கடந்த சுறவம் 21 அன்று (4-2-96) மாலை 6 மணியளவில் திருவொற்றியூர்ப் புட்பம் பழனிச்சாமி திருமண மாளிகையில் தென்மொழி ஆசிரியர் அன்னை **தாமரை பெருஞ்சித்திரனார்** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருக்குறள் மணி இறைக்குருவனார், பேரா. சொக்க லிங்கம், பாவலர் தென்முகநம்பி, தொழில் முனைவர் அறிவெழிலன், ப.சிவபெருமான், துரை.இராவணன், மீஞ்சூர்ப் பாற்கரனார், வேங்கட நாராயணனார் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர்.

திருவினர் அறச்செல்வி- மு.கருணாநிதி ஆகியோரின் பெண் குழந்தைக்குத் திருவாட்டி இறை. பொற்கொடி **'தமிழ்ப்பொழில்'** என்று பெயர் சூட்டி வாழ்த்தினார்.

**பாவாணர் படத்திறப்புவிழா :**

கன்னிகைப்பேர் தமிழர் கழகம், திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகம் ஆகியவற்றின் சார்பில் மொழி ஞாயிறு பாவாணர் படத்திறப்பு விழா கடந்த சுறவம் 25 அன்று (8-2-96) பிற்பகல் 4-மணிக்குச் சென்னை - தேவநேயப் பாவாணர் நூலகத்தில் இலக்கணப் புலவர் த.ச. தமிழனார் தலைமையில் நடைபெற்றது. திரு.அருட்சோதி வரவேற்றார். பேரா.மதிவாணனார் மொழிநூல் மூதறிஞர். பாவாணரின் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். திருக்குறள் மணி இறைக்குருவனார் சிறப்புரையாற்றினார். புலவர் தசுந்தரராசன் (தலைநகர்த் தமிழ்ச்சங்கம்) புலவர் கோ. தேவராசன் ஆகியோர் தமிழ்ப்பணி கருதிப் பாராட்டப் பெற்றனர். புலவர் இளைய நம்பி நன்றி நவின்றார்.

**பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் படத்திறப்பு :**

பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் பைந்தமிழ் இலக்கியப் பாசறையின் தொடக்கவிழா உள்ளிட்ட முப்பெருவிழா கடந்த சுறவம் 27 அன்று (10-2-96) மாலை 6 மணிக்கு சென்னை-சைதை அறிஞர் கால்டுவெல் ஆங்கிலப் பள்ளியில் 'உதவிக் கை' முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாசறையின் செயலாளர் நந்தகுமார் வரவேற்றார். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் இரா. முத்துக்குமாரசாமி பன்மொழிப் புலவர் படத்தைத் திறந்து வைத்தும், ஓவியர் பாவலர் மு. வலவன், திருவாளர்கள் ஊ. செயராமன், 'முகம்' மாமணி ஆகியோரைப் பாராட்டியும், திருக்குறள்மணி இறைக்

குருவனார், பாசறையின் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தும் உரையாற்றினர். பாவலர் மறைமலையான், புலவர். பி.சிகணேசன், புலவர் இராசேசுவரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## ஆளுநர் மாளிகை முன் ஆர்ப்பாட்டம் .... தமிழறிஞர்கள் தளை! :

தமிழில் பட்டம் பெறாத ஒருவர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக அமர்த்தப் பெற்றிருப்பதைக் கண்டித்து பல்வேறு அமைப்புகளின் சார்பில், கடந்த கும்பம் 12 அன்று (24-2-96) மாலை 4 மணியளவில் சென்னை -சின்னமலையிலிருந்து கண்டன ஊர்வலமும் கிண்டி ஆளுநர் மாளிகை முன் ஆர்ப்பாட்டமும் நடத்தத் தலைநகர்த் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்து அறிவித்திருந்தபடி அறிஞர் பெரு மக்களும் தமிழுணர்வாளர்களும் திரண்டெழுந்தனர்; மாநகராட்சி முன்னாள் உறுப்பினர் மா.சு.சம்பந்தனார் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது. அவ்வளவில் காவல் துறையினர் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர்; அனைவரையும் தளைப்படுத்திக் கொண்டு சென்று கிண்டிக் காவல் நிலைய வளாகத்தில் சிறைவைத்தனர். அங்குப் புலவர் சேது அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் 'எழுகதிர்' ஆசிரியர் அரு.கோபாலன், திரு. குரு. இதயமணி, புலவர். இறைக்குருவ னார், திருசின்னராசு, புலவர் அப்துல் காதர், புலவர் சுந்தரராசன் ஆகியோர் உரையாற்றினர். இரவு 8 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப் பெற்றனர்.

## பாவலரேறு பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டம் :

சென்னை, தேனாம்பேட்டை தியாகராயர் சாலையில் கடந்த கும்பம் 28-அன்று 11-3-96 மாலை 6 மணிஅளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பிறந்த நாள் விழாவும், தமிழர் ஒற்றுமை பொதுக்கூட்டமும் தமிழ்மக்கள் ஒன்றியத்தின் சார்பில் தோழர் மு.அரசெழிலன் தலைமையிலும், திருவாளர் தேனா. பாலசந்தர், பா.கண்ணன், பெ. போர்வேந்தன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. திரு. ச. விடுதலை விரும்பி வரவேற்புரையாற்றினார். 'எழுகதிர்' ஆசிரியர் அரு. கோபாலன் பேரா. இன்குலாப், திருவாளர்கள் நுங்கை வீ.பாபு, குரு. இதயமணி, வழக்கறிஞர் தி. இராமதாசு, டி.எசு.எசு.மணி, எசு.மழைமேனிப் பாண்டியன், உண்மை விரும்பி ஆகியோர் உரையாற்றினர் திரு. சு. தமிழரசன் நன்றியுரையாற்றினார். விழாவின் தொடக்கத்தில் தேனிசை செல்லப்பாவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## அ. அதியமான் – மலர்விழி மணவிழா :

உ.த.மு.க. துணைச்செயலர் திரு. மா. அதியமான் அவர்களின் புதல்வர் செல்வன் அ. அதியமான், திரு. ச. கந்தையா அவர்களின் புதல்வி செல்வி மலர்விழி ஆகியோர் மணவிழா கடந்த கும்பம் 20 ஞாயிறு

(3-3-96) அன்று திருநெல்வேலி - சங்கர்நகர்ச் சங்கர் திருமணமண்டபத்தில் திரு. சிவ.சேதுராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. மா. அதியமான் வரவேற்புரையாற்றினார். சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் திருமண நிகழ்ச்சியை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார். உ.த.மு.க. பொதுச் செயலாளர் பறம்பை. அறிவன், திரு. தமிழ்மாறன், வழக்கறிஞர் வை. பாண்டிவளவன் ஆகியோர் இல்லற நெறியுரை நிகழ்த்தினர். திருவாளர்கள் இரா. இராச சொர்ணவேல் உடன்பிறப்பினரின் குழலிசை (கிளாரினெட்) நடைபெற்றது.

**தமிழுரிமைக் காப்பு மாநாடு :**

தமிழுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் தென்மொழி பயிலுநர் அவை நடத்திய தமிழுரிமைக் காப்பு மாநாடு - பாவலரேறு சிறப்பியல் கருத்தரங்குகள் கடந்த கும்பம் 26 காரி (9-3-96) அன்று பனப்பாக்கம், செங்கழனி முத்துவேல் திருமண அரங்கில் காலை 11 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை எற்றி வைத்து - திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். திரு. நற்றேவன் வரவேற்புரை நல்கினார். திரு. நா. அரணமுறுவல் அவர்கள் ''தமிழுரிமைக் கூட்டமைப்பின் கோரிக்கை விளக்க வரைவறிக்கை'' நூலினை வெளியிட்டு உரை நிகழ்த்தினார்.

தமிழே கல்விமொழி எனுந் தலைப்பில் திருவாட்டி, இறைபொற்கொடி, தோழர் தியாகு ஆகியோரும்

தமிழே தொடர்பு மொழி எனுந் தலைப்பில் திரு. பன்னீர்செல்வம், ஆசிரியர் கந்தசாமி, புலவர் தமிழ்ச் செல்வி ஆகியோரும்

தமிழே ஆட்சி மொழி எனுந் தலைப்பில் பேரா. இன்குலாப் அவர்களும் உரையாற்றினார்.

பாவலரேறு சிறப்பியல் கருத்தரங்கத்திற்குப் புலவர் குமர. தன்னொளியன் தலைமை தாங்கினார். அன்னை தாமரை பெருஞ்சித்திரனார் அவர்கள் முன்னிலை ஏற்றார். மருத்துவர் தோழர் விமுனாமூர்த்தி, புலவர் வெ. மாசிலாமணி, திரு. செந்தமிழ்க்கோ, தோழர் புஞ்சை கோதண்டன் ஆகியோர் உரையாற்றினர். நெல்லூர்ப்பேட்டை சனார்த்தனன் நன்றி கூறினார்.

மாலை 7 மணி அளவில் நெமிலியில் திரு சேட்டு, திருமா. செ. தமிழ்மணி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வரவேற்றார் திரு. தியாகு, பேரா. பா. கல்யாணி, திரு. நா அரணமுறுவல், திரு.தமிழ்முகிலன், திரு. க. கோதண்டன், ஆசிரியை லூர்துமேரி, புலவர் வெ. மாசிலாமணி, செல்வி அங்கயற்கண்ணி ஆகியோர் உரையாற்றினார்.

திரு. வேணுகோபால் தாம் இயற்றிய தமிழுரிமைப் பாடலைப் பாடினார்.

# தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தராக ஒரு தெலுங்கரை அமர்த்திய ஆளுநருக்கு

# அறிஞர் சாலையார் கண்டனம்

*உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக் கழக அமைப்பு வல்லுநர் குழு.*

ஒட்டுமொத்தமான தமிழின் மேம்பாட்டுக்காக நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்குத் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரைத் துணைவேந்தராக அமர்த்திய தமிழக ஆளுநரின் நடவடிக்கை மிகமிகத் தவறானது. எனவே, ஆளுநரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் என்பது, கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் உள்ள தமிழ்த்துறைகளைப் போல, வழக்கமான ஆராய்ச்சிகளை நடத்தும் ஒரு நிறுவனம் அல்ல. தமிழின் பழமையிலும் அதன் வளமார்ந்த பண்பாட்டிலும் இதுவரை கண்டறியப்படாமல் இருக்கிற பெருமைக்குரிய பக்கங்களைக் கண்டறிந்து உலகுக்கு உணர்த்துவதும், அப்படிக் கண்டறியப்படும் மாண்புயர்ந்த தமிழ் நெறிகளை மேன்மேலும் வளர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வப்பணிகளில் ஈடுபடுவதுமே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அடிப்படை நோக்கம். எனவே. ஏதாவது ஒரு துறையில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்று 10/15 கட்டுரைகளை எழுதி விடுவதாலேயே ஒருவரைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக அமர்த்த முடியாது. தமிழின் இயல், இசை, நாடகம், பண்பாடு முதலியவற்றில் அழுத்தமான படிப்பும் தமிழ் இனத்தின் தலையோங்கிய புகழ் வரலாற்றில் ஆழமான ஈடுபாடும் கொண்ட ஒருவரே தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பை ஏற்க வேண்டும். இந்தத் தகுதிகள் ஒருவருக்கு இருக்க வேண்டுமானால் அவர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவராக இருக்க வேண்டியது மிக மிகத் தேவை. அத்தகைய ஒருவருடைய வழிகாட்டுதலில்தான் தமிழ்ப் பல்கலைக் கழகம் வளமான தமிழ் நலப் பணிகளை நடத்தி வைக்க முடியும். அத்தகைய ஒருவர்தான் தமிழுக்கு பெருமை தராத போலித்தனமான எண்ணங்கள் தமிழ்ப் பல்கலைக் கழக எல்லைக்குள் தலையெடுக்காதபடியும் பார்த்துக் கொள்ள முடியும். 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்பது பழமொழி அல்லவா?

பல துறைகளிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கும் தமிழை மீட்டெடுத்து அதற்கு உரிமையான ஆட்சி, கல்வி முதலான தளங்களில் அமர்த்த வேண்டிய இந்தக் காலக்கட்டத்தில், அமர்த்தியிருக்க நல்ல தமிழர் ஒருவரை வேண்டிய துணைவேந்தர் பதவியில் தமிழர் அல்லாத ஒருவரைத் தேடிப் பிடித்து அமர்த்தியிருப்பது வேண்டுமென்று செய்யப்பட்ட தவறு என்றே கருத வேண்டியுள்ளது. எனவே இதை வன்மையாகக் கண்டிக்க வேண்டியுள்ளது.

துணைவேந்தராக அமர்த்தப்பட்டுள்ள முனைவர் கருணாகரன் தமிழுலகம் நன்கு அறிந்துள்ள ஒரு தமிழறிஞர் அல்ல என்பதோடு, தமிழ்நலச் சிந்தனையாளர்களிடத்தில் நன்மதிப்புக் கொண்டவர் அல்லர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1988-இல் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், "வேறு மொழிகளிலிருந்து புதிய கருத்துகள் தமிழில் பெயர்த்து வழங்கப்படுவதைப் பாரதிதாசன் விரும்பவே இல்லை" என்று ஒரு பொய்ப்பழியை அந்தப் பாவலர் மீது சுமத்தியவர் இந்தக் கருணாகரன்.

"தமிழிலில்லாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்" என்றும், "வெளி உலகில் சிந்தனையில் புதிது புதிதாக விளைந்துள்ள எவற்றிற்கும் பெயர்களெல்லாம் கண்டு தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெல்லாம் செய்து செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்திடவும் வேண்டும்!" என்றும் பெரு விருப்பம் கொண்டிருந்த பாவலரைத் தவறாகக் காட்டிய கருணாகரனுக்கு இக்காலத் தமிழில் கூடப் போதிய பயிற்சி இல்லை என்பது வெட்ட வெளிச்சம். இத்தகைய தமிழரே அல்லாத ஒருவரைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அமர்த்தி தமிழையே இழிவு படுத்திய ஆளுநர் சென்னாரெட்டிக்குத் தமிழர்கள் கடும் கண்டனம் தெரிவிப்பதோடு, மீண்டும் அவர் இத்தகைய தமிழ் மதிப்புக்குறைவான பணிகளில் ஈடுபடாதபடி அவரைத் தடுத்து வைக்கவும் வேண்டும்.

## ஆசிரியர் இல்ல முகவரி

**பாவலரேறு தமிழ்க்களக் கட்டுமானப் பணிக்கு வாய்ப்பாக மேடவாக்கத்தின் அவ்விடத்தின் அருகிலேயே திருவாட்டி. தாமரையம்மையார் இல்லம் மாற்றப்பட்டுள்ளது. இனி அன்பர்கள் கீழ்க்காணும் முகவரியைக் குறித்துப் பயன்படுத்த வேண்டுகிறோம்.**

**திருவாட்டி. தாமரை பெருஞ்சித்திரனார்.**
சி.கே. அடுக்குமாடி இல்லம். (G.K. Flats)
காயிதே மில்லத் கல்லூரி எதிரில்,
வேளச்சேரி சாலை, மேடவாக்கம். சென்னை - 601302.

## தென்மொழி நாள்காட்டி

இவ்வாண்டுக்குரிய 'தென்மொழி நாள்காட்டி' வெளிவந்துவிட்டது.

பாவலரேறு ஐயா அவர்களின் வீறுரை யாற்றும் தோற்றப் பொலிவு கொண்ட படம் தாங்கி வந்திருக்கிறது.

ஒவ்வொரு மாதத்திற்கும் தனித்தனித் தாளில் தமிழ் ஆங்கில மாதங்கள் இணைந்து அச்சேறியுள்ளது.

தென்மொழி இயக்கக் குறிப்புகள், பாவலரேறு ஐயா அவர்களின் பொதுவாழ்வுக் குறிப்புகள், பிற முகாமையான குறிப்புகள், ஐயா அவர்களின் அருங் கருத்துகள் மற்றும் பா வரிகளில் சிற்சில, பெருமக்கள் பலரின் கருத்துரைகள் முதலியன இந் நாள்காட்டி யில் இடம்பெற்றுள்ளன.

விலை உரு. 12/- (நேரில்)

அஞ்சல் வழிப் பெறுவோர்க்கு – உரு. 15/- பத்துப் படிகளும் அதற்கு மேலும் வாங்குவோர்க்கு 20 விழுக்காடு கழிவு உண்டு. – அமைச்சர், தென்மொழி

## தென்மொழி வெளியீட்டு உரிமை அறிக்கை!

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச்சட்டம் – 1956

19–ஈ.ஆ.(வகுப்பு 8ஆம் கட்டளைப்படி)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | | : | சென்னை |
| 2. | காலமுறை | | : | மாதம் ஒரு முறை |
| 3. | அச்சிடுவோர் | பெயர் | : | திருவாட்டி.மா. தாமரை (எ) மா. கமலம் |
| | | இனம் | : | தமிழர் |
| | | முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை -5. |
| 4. | வெளியிடுவோர் | பெயர் | : | திருவாட்டி மா. தாமரை |
| | | இனம் | : | தமிழர் |
| | | முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை -5 |
| 5. | ஆசிரியர் பெயர் | | : | திருவாட்டி.மா.தாமரை சென்னை . 5. |
| | ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் | | | திருவாட்டி. மா. தாமரை |

மா. தாமரையாகிய நான் மேலே குறிப்பிட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

20-3-1996
சென்னை -5

மா. தாமரை
(ஒப்பம்)

# நமக்கு வந்த மடல்கள்.

- தென்மொழி தொடர்ந்து வெளிவருவது கண்டு மகிழ்வுற்றேன். பாவலரேறு ஐயா அவர்கள் நாற்பதாண்டுகளுக்கு மேலாக முழக்கிய விடுதலைக் குரல் அவரோடு அமைந்துவிடுமோ என்று கவலுற்றிருந்த எனக்குத் தென்மொழி தொடரும் செய்தி தெம்பூட்டியது. தென்மொழி அன்பர்கள் கூட்ட முடிவுகள் வழி தென்மொழியின் இன்றைய நிலையையும், அது தொடர்ந்து வெளிவர எடுத்து வரும் முயற்சிகளையும் அறிந்து கொண்டேன்.

**– நலங்கிள்ளி,** அமெரிக்கா

- தென்மொழி இதழ் தொடர்ந்து வெளிவருவதற்கும் அதே போல் தமிழ்நிலம் தமிழ்ச்சிட்டு விரைவில் வெளிவருவதற்கும் என் வாழ்த்துகள் என்றும் உண்டு.

  செந்தாழை ஆறிறைவன் எழுதியுள்ள கட்டுரை உண்மையில் மிகவும் நன்றாக இருந்தது. அவர் வரிகள் எமக்கு ஆறுதல் அளிக்கின்றன. தமிழகத்தில் ஈழ ஏதிலிகளுக்கு இழைக்கும் கொடுமைகள் குறிப்பாக சிறப்புத் தங்ககம் (முகாம்) கொடுமைகளை மக்களிடையே அம்பலப்படுத்துங்கள்.

**– பாலச்சந்திரன்,** துறையூர்

- தமிழ்-தமிழர்-தமிழ்நாடு எனும் உயிரோட்டத்தை நமக்கெல்லாம் கலந்தூட்டிய பாவலரேறு ஐயா அவர்கள் இவ்வளவு மாயமாய் மறைந்துவிட்டார்களே என்பதை எண்ணவே நெஞ்சம் தாங்கவில்லை. நீங்களும் அவர்களது கொள்கைகளைத் தமிழுள்ளங்களில் பதியச் செய்ய பாடுபட்டு வருகின்றீர்கள். தென்மொழிப் பணியைத் தொடர்வது குறித்து மிகவும் மகிழ்ச்சி.

**– மு. தமிழ்நெஞ்சன்,** துரையூர்.

- தம் வாழ்நாளெல்லாம் தமிழ் தமிழ் தமிழ் என்றே உயிர்த்த பாவலரேறு ஐயா அவர்களின் பாடல்கள் இந்த நூற்றாண்டு வரலாற்றின் பகுதி.

**– முனைவர். பொ. பாலசுப்பிரமணியம்,**
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

- தென்மொழிப் பேராசான் பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் ஆண்மைத் தமிழ் மேன்மை எழுத்துத் தொகுதிகளையும், தூய்தமிழ் நூல்களையும் படிக்கும் பெறற்கரும் பெரும்பேற்றை எய்தியிருக்கும் அன்பருள் யானும் ஒருவன்.

ஆன்ற தமிழ் ஈன்ற ஆண்மைத்தோன்றல் தூய்மை நோன்று துலங்கொளியால் ஏன்ற நெஞ்சகத்தே ஏற்றம் செய்து உய்வித்த ஒண்டிறல் உரவோர், தனித்தமிழியத்தின் சான்று தாமாகித் தமிழர்தம் தாழ்வகற்றி உலகுதொழ வந்த ஓவா பேருழைப்பின் ஓங்கு புகழ் மாண்பிறப்பு பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார்தம் மறைவிற்குப் பின் அன்னவர்தம் ஆற்றரும் அரும்பணிகளை அவர்தம் அடியொற்றி, ஆற்றிவரும் தங்களின் மொழித்திறத்தின் முட்டறுத்த மும்மைத்தமிழ் மொய்ம்பொளிரும் மூதறிவே, மூவாச்செயலுறவே, என்றும் செந்தமிழ்க்கே சேருஞ்சீர்த்தியே, கற்றதனாலாய பயன்சுரந்து சிறந்து பீடுபொலிய நீடு வாழிய!.

தமிழ் நெறிக்கழகம், மலேசியா **இரா. திருச்செல்வம்**


- பாவலரேறு ஐயா அவர்களின் அரிய படைப்பிலக்கியம்
- செறிவுறு பாக்களொடு விரிவுறு விளக்கங்களையும் உடன் கொண்டது.
- செம்மையான பதிப்பு

# நூறாசிரியம்

விலை: உரு : **100.00**

**பதிவஞ்சலில் பெறவிரும்புவோர்**

**உரு 115 (நூற்றுப்பதினைந்து மட்டும்) விடுக்க :**

*தொடர்புக்கு :*

**தென்மொழி நூல் வெளியீட்டு விற்பனையகம்**

**5 அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.**


தென்மொழி அச்சகம், சென்னை – 600 005. (தொலைபேசி எண் : 847829)